Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு

விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது சித்திரை 9 ஆம் நாள் துல்கஃதா 16 (22-4-62) ஞாயிற்றுக்கிழமை இதழ் 70

பட்டு, பருத்திப்
பிடவைகளுக்குச்
சிறந்த ஸ்தாபனம்
டயரும்ஸ்
மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

# நயினதீவு தேர்திருவிழா

## திரைப்படமாகும்

### அரசாங்க தகவல் பகுதி தீர்மானம்

### நிகழ்ச்சிகளை வானொலியில் அஞ்சல் செய்ய முயற்சி

கொழும்பு, சனி

ஜூன் மாத மத்தியில் நடைபெறவிருக்கும் நயினதீவு நாகபூஷணி அம்மன் கோவில் ரதோற்சவ திருவிழாவை சினிமாப்படம் பிடிப்பதென அரசாங்க தகவல் இலாகா தீர்மானித்துள்ளது.

தகவல் இலாகா டைரக்டர் திரு. பெர்னன்டோ சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்தபோது நயினதீவுக்கு விஜயம் செய்து உற்சவ காலங்களில் சமய சம்பந்தமான சினிமாப் படங்களை காண்பிப்பது, தேர், தீர்த்தம் உற்சவங்களை சினிமாப்படம் பிடிப்பதற்கான ஏற்பாடுகள் சம்பந்தமாக ஆராய்ந்தார்.

சினிமாப்படங்களை காண்பிப்பதற்கு வேண்டிய யந்திர சாதனங்கள் அமைந்த மோட்டார் வண்டியை கடல் கடந்து கொண்டு வருவதற்கான விசேஷ ஏற்பாடுகள் வேண்டியிருப்பதனால் தான் இதுவரை காலமும் இம்முயற்சி பலன் அளிக்க வில்லையெனவும், இம்முறை மக்களுடைய உதவி ஒத்தாசையுடன் எதுவிதத்திலும் ஏற்பாடுகளைச் செய்வதாகவும் நிர்வாகிகளுக்கும் உறுதியளித்ததாக அறியப்படுகிறது.

படக்காட்சியை காண்பிக்க தகவல் இலாகா உபயோகிக்கும் மோட்டார் படகை ஊர்காவற்றுறையிலிருந்து நயினதீவுக் கரைக்கு கொண்டு செல்வதற்கான முயற்சி வெற்றியளித்தால் இலங்கையிலுள்ள இந்து ஆலயங்கள் நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர், உற்சவங்கள் சம்பந்தமான சினிமாப்படம் காண்பிக்கப்படும்.

இம்முயற்சி வெற்றியளிக்க உதவுவதாக ஆலயத்தில் அக்கறை கொண்டவர்கள் அனேகர் முன்வந்திருந்திருப்பதாகத் தெரிகிறது.

இவை சம்பந்தமான சகல ஏற்பாடுகளையும் முதலியார் குல. சபாநாதன் கவனித்து வருவார்.

சினிமாப் படம் பிடிப்பது, சினிமாக் காட்சிகளைக் காண்

(12ம் பக்கம் பார்க்க)

★ ஈழநாடு 22—4—62 ★

## திருமுறைச் செல்வம்

தமிழ்நாட்டிலே புகழ்பெற்ற ஒரு பாடகா யாழ்ப்பாணம் பரமேச்வராகல்லூரிக்கு வந்திருக்கையில், தேவாரம் பாடும்படி அவரைக் கேட்டனராம். ஆனால் அவர் காதில் விழாதது போல் பேசாமல் இருந்துவிட்டார். பின்னர் மற்றோரிடத்திற்குச் சென்றதும், அவரே, 'இங்கு அதைப்பாடுகிறேன்' என்று சொல்லி அருமையாகத் தேவாரம் பாடினாராம்!

ஏன் முதல் இடத்தில் அவர் பாடவில்லை என்று கேட்டதற்கு, அங்கு பல பிரமுகர்கள் இருந்ததாயும், தேவாரத் திருமுறைகளைப் பாடினால் தம்மைத் தாழ்வாக நினைத்துவிடுவரென்றும், அதனாலேயே, அங்கு பாடவில்லை என்றும் சமாதானம் கூறியதாக ஈழத்தில் புகழ்பெற்ற வித்வான் ஒருவர் தெரிவித்தார்! தேவார திருமுறைகளைப் பாடினால், மதிப்புக் குறைந்துவிடுமாம்! அட கடவுளே!

என்றாலும் பல வித்வான்களிடையிலும் இக் கருத்து பொதுவாகப் பரவி இருப்பதைப் பார்க்கிறோம். இங்கு நடைபெறும் இசை அரங்குகள் பலவற்றிலும் சில வித்வான்கள் திருமுறைகளிலிருந்தோ, பிரபந்தங்களிலிருந்தோ பாடுவது மிகமிக அருமை. இரண்டொரு வித்வான்கள் இதற்கு விதிவிலக்காக இருப்பதை அறிவோம். தமிழ் இசை இயக்கம்வெற்றி பெற்று பரவியுள்ள இக்காலத்தில், தமிழ் இசையிலே மிகச் சிறந்த அருட்பாடல்களான திருமுறைகளை, பிரபந்தங்களை பாடகர்கள் பகிஷ்கரித்து வருவது பெரும் நஷ்டமும் வருந்தத்தக்கதுமாகும்.

சமய குரவர்கள் பாடிய இந்த அருட் பாடல்கள், இசைக்கு ஒத்துவராதென்றோ, பொது மக்கள் ரசிக்க மாட்டார்களென்றோ கருதுவதாயின் அது தவறு. சில சினிமாக்களிலும் தேவாரங்கள் அருமையாகப் பாடப்படுகின்றன. கவர்ச்சியானமெட்டுக்களில் அவற்றை மிக இனிமையாகப்பாடி மக்களின் பாராட்டுதலைப் பெற முடியுமென்பதை சமீபத்தில் இங்கு தமிழகத்திலிருந்து வந்த தருமபுரம் ஆதீன வித்வான்கள் இருவர் காட்டியுள்ளனர்.

திருமுறைப் பாடல்கள் செவிகளுக்கு மட்டுமன்றி உள்ளத்துக்கும் நல்விருந்தாகும். இவற்றை இன்னிசைக் கச்சேரிகளிலே அதிகம் பாட ஒழுங்கு செய்யவேண்டும். இப் பாடல்களால் கச்சேரியின் மதிப்பு உயருமேயன்றி நிச்சயம் தாழ்வடையாது. கொழும்பிலே நடைபெறும் திருமுறை மகாநாட்டின் பயனாக, இந்த அவல நிலை மாறி இனி நமது வித்வான்கள், கூச்சமின்றி, தயக்கமின்றி, இந்த திருமுறைச் செல்வங்களை அதிகமாகப் பயன்படுத்தி தாம் இன்புற்று தமிழ் கூறும் நல்லுலகையும் இன்ப மயமாக்குவரென்றே நம்புவோம்.

# 'தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கு சமயநூல்கள் அவசியம்'

### திருமுறை விழாவில் வரவேற்புரை

கொழும்பு, வெள்ளி

"தமிழ் மக்கள் நல்வாழ்வு வாழவேண்டுமெனில் எங்கள் சமய நூல்களைக் கற்று அவற்றைத் துருவி ஆராய்ந்து அவற்றின் வழி ஒழுகுதல் வேண்டும்' என்று இன்று இங்கு ஆரம்பமான திருமுறை விழாவில் கொழும்பு விவேகானந்த சபைத் தலைவர் திரு. இரா. சபாநாயகம் வரவேற்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

கொழும்பு விவேகானந்த சபையினர் நடத்தும் திருமுறை விழா இன்று ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைகிறது.

திரு. சபாநாயகம் தமது வரவேற்புரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

ஒவ்வொரு மதத்துக்கும் சமய நூல்கள் இன்றியமையாதன. உலகத்தில் நிலைபெற்று விளங்கும் மதங்களெல்லாம் தத்தம் நூல்களை உடையனவாய் இருக்கின்றன. கிறிஸ்தவர்களுக்கு பைபிள் என்றும், பௌத்தருக்கு தர்மபதம் என்றும், இஸ்லாமியருக்கு திருக்குர் ஆன் என்றும், மத நூல்கள் வழங்கி வருவதை நாம் அறிவோம். தென் இந்தியாவிலும், ஈழத்திலும் மற்றும் இடங்களிலும் பரவி வாழும் கோடிக்கணக்கான சைவமக்கள் சைவத் திருமுறைகளையே தங்கள் சமய நூலாகப்போற்றி வருகிறார்கள்.

தமிழ் மக்கள் நல்வாழ்வு வாழவேண்டுமெனில், எங்கள் சமய நூல்களைக் கற்று அவற்றைத் துருவி ஆராய்ந்து, அவற்றின் வழி ஒழுகுதல் வேண்டும். எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருளின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அறிவது நல்லறிவாகும். மெய்ப்பொருள் எக் காலத்துக்கும் உண்மையாதலால், அது நிலைபெற்று விடுகிறது. 'உள்ளது அழியாது இல்லது தோன்றாது.' தமிழ் மக்கள் தங்கள் சமய நூல்களும், கொள்கைகளும் தங்களுக்குச் சிறந்தனவென ஏற்றுக் கையாள வேண்டும். சமய நூல்களை முறைப்படி கற்று வருதல் வேண்டும். ஒழுங்கான பயிற்சியின் உயர்வினை உணராதவர் அதனை விரும்பமாட்டார். சமயம் முன்னேறுவதற்கு அடிப்படையாகத் தேவைப்படுவன, கடவுள் நம்பிக்கையும் ஒழுக்கமுமே.

சைவசமயத்திற்குரிய பக்திப் பாடல்கள் போதிக்கும் நல்

(12ம் பக்கம் பார்க்க)

## இ. தி. மு. க. மகாநாடு

அட்டன், சனி

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது மாநில மகாநாடு பொதுச் செயலாளர் திரு. ஏ. இளஞ்செழியன் தலைமையில் அட்டன் டன்பார் மைதானத்தில் இன்று ஆரம்பமானது.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு அரசியல் மகாநாட்டை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆரம்பித்து வைப்பார்.

ஞாபகப்படுத்துகிறோம்!
பட்டு, பருத்திச் சேலை வகைகளுக்கும் "றெடிமேட்" உடுப்பு வகைகளுக்கும்
டொலரும்ஸ் (TOLARAMS)
46, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 9-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (22-4-62) முதல் சித்திரை திங்கள் 15-ம் நாள் சனிக்கிழமை (28-4-62) வரை உள்ள பலன்கள்.

## மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம் வரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மனஉறுதி, தொழில் ஊக்கம், முன்னைய கன்டம் நீங்கி சந்தோஷம் கிட்டல், குடும்ப ஒற்றுமை, உழைப்புக்கேற்ப ஊதியம், வர்த்தகர்களுக்கு எல்லாவகை வியாபாரங்களும் விருத்தியடைவதுடன் நல்லஆதாயமும்கிடைத்தல், உத்தியோகத்தருக்குப் பொறுப்புக்கள் அதிகரித்தல், மேலுத்தியோகத்தரால் ஆதரவும் நற்பெயரும் கிட்டுதல், கமத்தொழிலாளருக்கு வீண் செலவுகளும், குடும்ப நிம்மதியும், பலிதக்குறைவும், மாணவருக்கு வித்தைச் சிறப்பும், பெரியோர் ஆதரவும், பெண்களுக்கு சௌகரியச் சிறப்பு, குடும்ப நலம், இலட்சுமி கடாட்சம், தனதானிய விருத்தி ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 27, 28, 29 சுபதினங்களாகும்.

★

## இடப இராசி

(கார்த்திகை பின் முக்கால் ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் அலைச்சல் அதிகம், முக்கிய கருமங்கள் தடைப்படல், பெரியோருடன் பகை, பணச்செலவு, குடும்ப அமைதி குன்றுதல், வைத்தியச் செலவினம் அதிகரிப்பு, வர்த்தகத்தில் ஆதாயச் சிறப்பு, மதிப்புயர்ச்சி, நாணயச் சிறப்பு, உத்தியோகத்தருக்கு பிடிவாத குணமும் அவசர நடத்தையும் உயர்வையும் மதிப்பையும் குறைத்தல், பொறுப்புக்களை நிறைவேற்ற இயலாமை, மேலோர் அதிருப்தி, பயிர்த்தொழிலாளருக்கு இனபந்துக்கள் ஆதரவு, தொழில் சிறப்பு, மாணவருக்கு பரீட்சைகளில் வெற்றி, வித்தைச் சிறப்பு. பெண்களுக்கு குடும்பச்சிறப்பு கணவருக்கு நன்மை, குழந்தைகளுக்கு சிறப்பு ஆகியன காணப்படுகின்றன.. இவர்களுக்கு ஏப்ரல் 22, 23 சுபதினங்களாகும்.

★

## மிதுன இராசி

(மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ வாரத்தில் சுபகருமங்களும் சிறப்புகளும் பெருகும். தருமவழிச் செலவுகள், தெய்வவழிபாடு, குடும்ப ஒற்றுமை, சந்ததி நலன்கள், மங்கள கருமங்கள் நடத்தல், தொழில்வகை வெற்றி, வர்த்தகச் சிறப்பு, செல்வாக்கு விருத்தி வார பிற்பகுதியில் சிறிது ஊக்கம் இன்றேல் பணநட்டம், உத்தியோகத்தருக்கு தொழிலிடத்தில் செல்வாக்கு, மேலோர் ஆதரவு, உயர்பதவி, இடமாற்றம், தொழில் முயற்சி வெற்றி, கமத்தொழிலாளருக்கு குடும்பச் சிறப்பு, கால்நடை விருத்தி, தொழில் வெற்றி, மாணவருக்கு கல்விச் சிறப்பு, பரீட்சை வெற்றி, வார பிற்பகுதியில் அலைச்சல், பணமுடை, பெண்களுக்கு தனதானிய விருத்தி, குடும்பச் சிறப்பு, சுபகரும முயற்சி, இன்ப சிந்தனை ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 22, 25, 26 சுபதினங்களாகும்.

★

## கடக இராசி

(புனர்பூசம் 4-ம்பாதம், பூசம், ஆயிலியம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கண்டங்கள் குறைதல், சுபகருமங்கள் பெருகுதல், சந்தோஷ வாழ்வு, நல்லவர் நட்பு, தொழில்வெற்றி, வருமானச் சிறப்பு, பிரயாண சுகம், குடும்ப ஒற்றுமை, கல்விச் சிறப்பு, சுபகரும முயற்சிகள், வர்த்தகச் சிறப்பு, தொழில் இலாபம், உத்தியோகச் சிறப்பு, உயர்ந்த பதவியினருக்கு நன்மை, ஊழியருக்கு ஆதரவு, வருமான உயர்வு, பயிர்த்தொழிலாளருக்கு நிதானம், பொறுமை வேண்டும், தொழிற்கேடு, பண நட்டம், கால்நடை நட்டம், மாணவருக்கு அரசாங்க உதவி, கல்விச் சிறப்பு, பிரயாணம், பெண்களுக்கு தார்மீக சிந்தனை, கணவர்—குழந்தைகள் சிறப்பு ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 24, 25, 27, 28 சுபதினங்களாகும்.

★

## சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மனத் தைரியம், தொழில் வெற்றி, பணவரவு, எதிரிகள் ஆதரவு, ஊழியர் உதவி, குடும்பச் சிறப்பு, சந்தோஷம், தெய்வ அனுகூலம் வர்த்தகச் சிறப்பு, நற்பலிதம், பணவரவு, உத்தியோகத்தருக்கு கடும் உழைப்பு, உழைப்புக்கேற்ற பலன் கிடையாமை, கமத்தொழிலாளருக்கு பயிர்த்தொழில் தாமதம், பண நட்டம், கால்நடை கஷ்டம், மாணவருக்கு பிதுருவழி உதவி, வித்தைச் சிறப்பு, அரசாங்க உதவி, பெண்களுக்கு வஸ்திராபரண லாபம், விவாகச் சிறப்பு, குடும்ப நலம் ஆகியன காணப்படுகின்றன, இவர்களுக்கு ஏப்ரல் 26, 28ந் தேதி சுபதினங்களாகும்.

★

## கன்னி இராசி

(உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்திரை முன்னரை முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் நீசர் தொடர்பு, பணநஷ்டம், தொழிற்கேடு, பிரயாண கஷ்டம், பெரியோர் விரோதம், குடும்ப சச்சரவு, களத்திரவழி உதவி, வார பிற்பகுதியில் சிரமம் குறைதல், உத்தியோகத்தருக்கு உடல் நலக்குறைவு, விடுமுறையிலிருத்தல், தொழில்கேடு, மேலோர் மதிபபுக்குறைவு, வர்த்தகத்துறையில் பொருள் நலம், ஆதாயம், நாணயம், தொழில் சிறப்பு, கமத்தொழிலாளருக்கு குடும்ப வைத்தியச் செலவு, சச்சரவுகள், மாணவருக்கு வார முற்பகுதியில் கல்வியில் தடை, ஞாபகமறதி, சோம்பல், வார பிற்பகுதியில் சுறுசுறுப்பு, கல்வி அபிவிருத்தி, கௌரவம், பெண்களுக்கு பிதுருவழி உதவி, குடும்ப நலம், களத்திர நன்மைகள் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 22, 23ந் தேதிகள் சுபதினங்களாகும்.

★

## துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பிரயாணக்கஷ்டம், உத்தேச கருமங்கள் சுபமாக முடிதல், தொழில் அபிவிருத்தி, வருமானம், பண விவகாரங்கள் சாதகமாகநடத்தல், சமூக மதிப்பு, குடும்ப சுகம், வர்த்தகத் துறையினருக்கு இலாபம், மதிப்பு, நாணய விருத்தி, உத்தியோகத்துறையினருக்கு காரியாலயங்களில் தொழில் மந்தம், மனவெறுப்பு, மேல் உத்தியோகத்தர் குற்றச்சாட்டு கேட்டல், ஊழியர்கள் இடர், பயிர்த்தொழிலாளருக்கு தொழில் வெற்றி, கால்நடை லாபம், பணவரவு, மாணவருக்கு கல்வி கேள்விச்சிறப்பு, பெரியோர் ஊக்கம், வார பிற்பகுதியில் உடல்நலம் குறைதல், பெண்களுக்கு குடும்ப ஆரோக்கியம், களத்திரச்சிறப்பு, குடும்ப நிம்மதி, பணவரவு, சுபகருமம் நடத்தல் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 24, 25 சுபதினங்களாகும்.

★

## விருச்சிக இராசி

(விசாகம் 4-ம்பாதம், அனுஷம், கேட்டை முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மனத்தளர்ச்சி, தொழிலூக்கம் குன்றுதல், சந்தேகங்கள், வெளிப் பிரயாண கஷ்டம், சந்ததிகளுக்காக அலைச்சல், வார இறுதியில் களத்திரவழி உதவி, வர்த்தகத்துறையில் மத்திமநிலை, புதியன தடை. பண முடக்கம், கடன்வரவில் தாமதம், உத்தியோகத்துறையில் மனத்தைரியம், வருமான உயர்வு, செல்வாக்கு, மோலோர் மதிப்பு, புதியன வெற்றி, பயிர்த்தொழிலாளருக்கு தாயாதிகளால் கஷ்டம், நண்பரால் இடர், ஊழியர் சச்சரவு, பணமுடை, மாணவருக்கு மனத்தளர்வு, சோம்பல், வித்தைத் தடை. வார பிற்பகுதியின்பின் கல்வியில் ஊக்கம், வித்தைச் சிறப்பு, பெண்களுக் குக்குடும்ப நிம்மதியின்மை, வைத்தியச் செலவு, அலைச்சல் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 22, 23, 28 சுபதினங்களாகும்.

★

## தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் அவசரப் பேச்சு, பொறுமையின்மை, பெரியோர் பகை, முயற்சித்தடை, பிரயாணக் கஷ்டம், கெட்டபெயர், குடும்ப சுகம், வார பிற்பகுதியில் சாதக சூழ்நிலை உருவாதல், நண்பர் ஆதரவு, வர்த்தகத்தில் எதிர்ப்புக்கள், போட்டியால் பண நெருக்கடி, வரவு தாமதம், கடன்படல், உத்தியோகத்தருக்கு அதிக ஆசை, புதிய யோசனைகள், பலன் இல்லாமை, நண்பரால் ஏமாற்றம், மாணவருக்கு கல்வி கேள்விகளில் தேர்ச்சி, உதவி, பணவசதி, வார பிற்பகுதியில் உடல்நலக் குறைவு, கமத்தொழிலாளருக்கு கால்நடைக் கேடு, தாயாதிகளால் கஷ்டம், தொழிற்கேடு, பெண்களுக்கு தேகநலக் குறைவு, குடும்பத்தில் செலவு, உடனுக்குடன் ஆரோக்கியம் பெறுதல் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 25, 28 சுபதினங்களாகும்.

★

## மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சிந்தனைத்தெளிவு, போக்குவரதது லாபம், பிரமுகர்கள் ஆதரவு, தொழில் முயற்சி வெற்றி, குடும்ப ஒற்றுமை, பணவரவு, தெய்வவழிபாடு, வர்த்தகத்துறையில் ஆதாயம், புதிய முயற்சி மத்திம பலிதம், நற்பெயர், உத்தியோகத்துறையினருக்கு அடிக்கடி பிறஇடபிரயாண கஷ்டம், தொழிலில் கடுமையாக உழைப்பு, எதிரிகளால் கெட்ட பெயர், மாணவருக்கு வித்தைச் சிறப்பு, பணவசதி, பரீட்சை வெற்றி, கமத்தொழில் ஆதாயம், பெண்களுக்கு மாதாவழி உதவி, சந்தோஷ வாழ்வு விவாகப்பேறு ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 22, 27, 28 சுபதினங்களாகும்.

★

## கும்ப இராசி

(அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் முடிய).

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்பவைத்தியச் செலவு, ஆரோக்கியக்குறைவு, அலைச்சல், தாயாதிகள் கலகம், நம்பி ஏமாற்றம், பணச்சிக்கல், சிரமங்கள் வாரபிற்பகுதியில் குறைதல், வர்த்தகத்துறையில் பொதுவான சூழ்நிலை, மத்திம ஆதாயம், உத்தியோகத்தருக்கு தொழில் உயர்வு, உற்சாகம், பாராட்டு, மாணவருக்கு சந்தோஷம், வெறுப்பு, மறதி, வார பிற்பகுதியில் வித்தை விருத்தி, சிறப்பு, கமத்தொழிலாளருக்கு தாயாதிகள் தொல்லை, குடும்ப சஞ்சலம், தொழிற்கேடு, பெண்களுக்கு மனஊக்கம், சகோதரபந்துக்கள் உதவி, குடும்பசுகம் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 22, 26 சுபதினங்களாகும்.

★

## மீன இராசி

(பூரட்டாதி 4-ம்பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்ப நிம்மதி, பணவரவு, தொழில் சீர்ப்படல், வெளிப்பிரயாணகஷ்டம், வாகனதி நட்டம், முயற்சித்தடைகள், வர்த்தகத் துறையில் ஆதாயம், நற்பெயர், நாணயம், உத்தியோகத்தருக்கு அவமானம், கண்டனம் கேட்டல், மதிப்புக்குறைதல், கமத்தொழில் நட்டம், தளர்ச்சி, கடன்படல், மாணவருக்குவார இறுதியில் கல்வியில் மந்தநிலை, முன்னர் கல்விவிருத்தி, பெண்களுக்கு குடும்பசுகம், இலட்சுமி கடாட்சம், தனதானிய விருத்தி, களத்திர நன்மை ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஏப்ரல் 24, 25, 27, 28 சுபதினங்களாகும்.


## விசேஷ இறக்குமதி!


உங்கள் வீடுகளை அழகாக அலங்கரிப்பதற்கும்
அதிக காலம் பாவிக்கக்கூடிய
திறம் கம்பளங்கள், பல கலர்களிலும்
விற்பனைக்கு உண்டு

| | |
|---|---|
| 9' x 12' | 407-00 |
| 8' x 10' | 302-00 |
| 6' x 9' | 190-00 |
| 5' x 8' | 142-00 |
| 4' x 7' | 93-00 |
| 3' x 6' | 61-00 |
| 2' x 5' | 42-50 |
| 2' x 4' | 27-25 |

# ஹான்ட்லூம்ஸ்

(இந்திய அரசாங்கம்)

47, பறங்கித் தெரு, யாழ்ப்பாணம்.

ஒக்ஸ்போர்ட்டுக்கு எதிராக இம்மாதம் நடைபெறும் படகுப் பந்தயத்துக்காக கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் பயிற்சிபெறுகின்றனர்.

சிலம்பின் சிறப்பு: 7

# அன்பின் ஆற்றல்

—வித்துவான் பொன். முத்துக்குமாரன்—

அன்பு தெய்விகத் தன்மை வாய்ந்தது. அன்பே இறைவன் வடிவமென்றும் அன்பு வேறு இறைவன் வேறு என்று கூறுதல் தவறு என்றும் ஆன்றோர் அறுதியிட்டுக் கூறினர். மனிதன் தன்னிடத்திலமைந்த அந்த அன்பென்னும் அருங்குணத்தைவளர்த்து ஈற்றில் தெய்வமாகின்றான். தாய் தந்தையரிடத்தில் அந்த அன்பு சிறந்து காணப்படுதலாலேயே அவர் முன்னறிதெய்வமாக மதித்து வணங்கப்படுகின்றனர். இத்தகைய அன்பின் பெருமையை அநுபவத்திற் கண்ட நம் முன்னோர்களாகிய தமிழ்மக்கள் இல்லறம் இனிது நடத்துதற்கும் இறைவனது திருவடியை எய்துதற்கும் அன்பினையே அருஞ்சாதனமாகக் கண்டனர்.

வள்ளுவர் அன்பினைப் பற்றி ஓர் அருமையான கருத்தை அறிவுறுத்துகின்றார். "அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார், மறத்திற்கும் அஃதே துணை" என்பது அவர் கூறிய குறள். அறத்தைச் செய்தற்கே அன்பு துணையாகும் என்று கூறுவோர் அறிவில்லாதவர். அதற்கு மட்டுமன்று, மறத்தை நீக்குதற்கும் அந்த அன்பு துணையானதாகும். இறைவன் நஞ்சினை அமுதாக்கியவர் என்றும், கல்லைப்பிசைந்து கனியாக்கியவர் என்றும் மணிவாசகப் பெருமான் அருளிச் செய்கின்றார். இறைவனின் குணமான அன்பும் அத்தகைய அரிய செயல்களைச் செய்ய வல்லதே. நம்மோடுபகையானவரிடத்தும் நாம் தூய அன்பினைச் செய்வோமாயின் அப்பகைவரின் நெஞ்சிலுறைந்துள்ள பகைமையைக்கரைத்து அவர்களுக்கு நம்மிடத்தில் அன்புண்டாகுமாறு நமது தூய அன்பு செய்யவல்லதாகும். இதனை அழுந்தி நின்று ஆராயாது மேலோட்டமாக எண்ணுவோமாயின் இது அசாத்தியமென்றே துணிந்து கூறுவோம். ஆயின், அன்பு நாம் கருதும் வகையில் எளியதொன்றன்று; அது வலியதில் வலியது; அரியதில் அரியது; ஆற்றலில் பெரியது. இவ்வுண்மையைச் சிலம்பு தெற்றெனக் காட்டுகின்றதே.

தன்னை மணஞ்செய்து சில ஆண்டுகள் மட்டுமே சேர்ந்து வாழ்ந்து பின்னர்த் தன்னைப் பிரியவும், பிரிந்த கோவலன் மாதவியோடு காதல் பூண்டு மகிழ்ந்து வாழவும், தன்னிடத்திலுள்ள செல்வம், அணிகலன் ஆகியன எல்லாம் மாதவியினிடத்துச் செல்லவும், கண்ணகி தன் கணவன் மேல் வைத்த அன்பில் சிறிதும் குன்றாதவளாய் இருந்தாள். கோவலனைப் பற்றியோ அவனது ஒழுக்கத்தைப் பற்றியோ குற்றம் நினையாமலும் உற்றாரோடாயினும் ஒரு வார்த்தையேனும் கூறாமலும் அப் பெண்ணணங்கு வாழ்க்கை நடத்தினாள். அவ்வாறு அவள் ஓராண்டு ஈராண்டன்றிப் பல்லாண்டுகள் கழித்தாள். ஆண்டுகள் கழியும் தோறும் அவளது அன்பும் வன்மையும் நன்மையும் சான்று விளங்கியது. கண்ணகியின் அன்பு அவளை மேன்மைப்படுத்தியதோடு அவளை மறந்திருந்த - ஆயினும் அவளால் நேசிக்கப்பட்ட அவளின் கணவனையும் திருத்தவும் திருப்பவும் வல்லதாகியது. நாம் ஒன்றினை வேண்டி நம் தெய்வத்தை

## இலக்கியச் சோலை

வணங்குகின்றோம். நமக்கு வேண்டிய பொருளைத்தெய்வம் நாம் எதிர்பாராத வழியில் நன்மை பெருகத்தருகின்றது. இறைவன் நமக்கு அருளும் முறைமை நமது சிற்றறிவினுள் அடங்கி அறியத்தக்க தொன்றன்று. எல்லாம் அறிந்த பேரறிவினனான இறைவன் நமக்கு வேண்டியதை நாம் எய்துதற்குரிய காலத்தில் நாம் வியக்கத்தக்கவகையில் அருளி இன்புறுத்துகின்றார். அன்பு என்னும் தெய்வப்பண்பும் தன் பயனைத் தரும்வகையில் வியக்கத்தக்க ஆற்றலையுடையதாகின்றது. மனையிலே அமைந்து வாழும் கண்ணகியின் மனத்தில் அடங்கி வளர்ந்த அவளது மாசற்ற அன்பு கோவலனின் உள்ளத்திலும் வாழ்க்கையிலும் ஒரு பெருந்திருப்பத்தை உண்டாக்கிற்று. அவள் கோவலனிடத்தில் தூதாக யாரையும் அனுப்பினாளல்லள். யாரையும் அனுப்ப விரும்பினாளுமல்லள். அத்தகைய உத்தமிக்கு அவளது அன்பே தூதாக ஆருமறியாமல் சென்றது. கொடிறும் பேதையும் கொண்டது விடாதென்னும்படி கோவலனின் உள்ளமும் மாதவியைவிடாது பற்றிநிற்கையில், அப்பிடியை - எவராலும் விடுவிக்கமுடியாத பற்றினை—யாதோ ஒன்று முற்றாக விடுவித்துவிட்டது. எந்த வகையில் என்பதையும் எந்தச் சந்தர்ப்பத்தில் என்பதையும் இளங்கோவின் காப்பியத்தில் பார்ப்போம்.

இந்திர விழாவின் இறுதி நாளில் கடலாடுதற் பொருட்டு கோவலனும் மாதவியும் காவிரி கடலோடுகலக்குமிடத்தில் ஓர் கழிக்கானலில் கூடாரமிட்டுத் தங்கியுள்ளனர். இன்னிசை கூட்டி இன்பங்காணவிரும்புகின்றான் கோவலன். மாதவி யாழினைச் சுருதி கூட்டிக் கொடுப்ப அதனைக் கோவலன் வாங்கி அழகிய பொருள் பொதிந்த பாடலை அமைத்து யாழ் வாசிக்கின்றான். அவன் பாடிய பாடல்களிற் சில காவிரியைப் பற்றியன; சில கானல் வரிப் பாட்டுக்களாயுள்ளன. கானல் வரிப் பாட்டுக்களில் கோவலன் பாடியவை ஒருத்திமேற் காதல்கொண்ட ஒருவன் அவளைப் பிரிந்து அவளை நினைந்து கூறியனவாய பொருளமைந்தவை. அவன் அவற்றைப் பாடிமுடித்ததும் மாதவி அவனிடத்தில் யாழை வாங்குகின்றாள். கோவலன் பாடிய பாடல்களின் பொருள் அவள் மனத்தினை அழுத்துகின்றது. மற்றொரு பெண்மேல் காதல் கொண்டான் போல அவன் பாடியமைகண்டு தானும் மற்றொருவன் மேல் காதல்கொண்டாள் போலப்பாட எண்ணுகின்றாள். உண்மையில், கோவலனையன்றிப் பிறரைத் தன் மனத்தகத்திலிருத்தாத குற்றமற்ற காதலுடையவாளாயினும் மாதவி விளையாட்டாக அவ்வித பொருளமைந்த பாடலையாழில் வாசிக்கத் தொடங்குகின்றாள். கோவலனோடு பல ஆண்டுகள் கூடி வாழ்ந்த வாழ்க்கையில் மாதவி அவனை எப்போதும் மகிழ்வித்தாளேயன்றி, விளையாட்டுக்காயினும் அவனைக் கவல்வித்தாளல்லள். மாதவி பரத்தையர் குலத்திற் பிறந்தவள் என்பதையோ, அவளது மனத்திலும் செயலிலும் மாசு இருக்கலாம் என்பதையோ அவன் எண்ணுதற்கிடமில்லாத வகையில் உயர்குலப்பெண் போல உள்ளத்தாற் பொய்யாது அன்புசெய்து அவனது பற்றுக்கும் பாராட்டுக்கும் உரியவளாய் விளங்கியமாதவி இப்போது இவ்வாறு பாட

(5ம் பக்கம் பார்க்க)

# பழங்கதை பேசிப் பயனில்லை

## உலக தமிழ்ச்சங்கம் ஒன்று அவசியம்

—ஆ. தேவராசன்—

**'உலகெலாம் தமிழ் பரவவேண்டும்' என்ற கட்டுரை சென்றவாரம் இங்கு வெளியிடப்பெற்றது. இவ்வாரம் அக் கட்டுரையின் இரண்டாவது பாகம் வெளியாகியுள்ளது. உலக தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவ வேண்டியதன் அவசியத்தைக் கட்டுரையாளர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.**

உலகெலாம் தமிழைப் பரப்பவேண்டிய உயர்ந்த பொறுப்பு நம்மீது சார்ந்திருக்க, "நாம் அதிகம் செய்யாவிட்டாலும் ஓரளவாவது செய்கிறோமா?" என்பது எம்மை நாமே கேட்கும் கேள்வியாக இருக்கிறது. நாம் என்ன செய்கின்றோம்? பழைய பெருமையை எடுத்துப் பேசிக்கொண்டு நமக்குள்ளே மகிழ்ந்து அமிழ்ந்து விடுகிறோம். தமிழன் அப்படி வாழ்ந்தான், தமிழன் இப்படி வாழ்ந்தான், தமிழ் அரசர்கள் தமிழ் அறிஞர்களைக் கௌரவித்து வாழ்வளித்தார்கள், தமிழ் மொழியைப் பேணி வளர்த்தார்கள் என்றெல்லாம் பேசிக்கொண்டே இருக்கின்றோம். இவையெல்லாம் உண்மைதான்— மறுக்கமுடியாதவையுங்கூட. ஆனால் வாழ்ந்தவன் மாண்டுவிட்டான்; வாழ்கிறவன் அப்படி வாழ வகையென்ன? வழியென்ன? இதைப்பற்றி நம்மில் யாரும் சிந்தனையைத் தொந்தரவு செய்துகொள்வதில்லை. உருப்படியான சாதனை திட்டங்களுடன் செயற்படுவதுமில்லை. பழம் பெருமை பேசிக்கொண்டிருக்கக் காலம் இல்லை. காலம் விரைந்து ஓடுகிறது. இப்போது வான்வெளிக் காலம். நாம் ஏற்கனவே முன்னேறும் இந்த உலகத்தில் பிந்திவிட்டோம். இழந்துவிட்ட காலத்தை எட்டிப் பிடித்துக் கூடவே சேர்ந்து ஓடவும் வேண்டும். பொறுப்பு இலகுவானதல்ல. சிரமம் மிக்கது, சிரத்தை வேண்டியது. இதை உணர்ந்து நாம் செயற்பட்டால் தான் — புதுமை வழிகளைப் பின்பற்றினால் தான் — நமது இலட்சியம் நிறைவேறும்.

### சங்கம் அவசியம்

நம்முள்ளே தமிழ் மொழி பற்றிப் பேசுவதால் பயன் எதுவுமில்லை. ஆயுத பலத்தால், அதிகார பலத்தால் அகிலமெல்லாம் தம் அருமை மொழியான ஆங்கிலத்தைப் பரப்பிய ஆங்கிலேயர் கூட இன்று நல்லுறவால், கூட்டுறவால் அந்த மொழி மேலும் நிலைத்து வாழ, செழித்து ஓங்க வழி தேடுகிறார்கள். இங்கிலாந்தில் இயங்கும் ஆங்கிலச் சங்கம் சுவிட்சர்லாந்தில் இயங்கும் அகில உலக ஆங்கிலச் சங்கம் போன்ற பெரும் நிலையங்கள் இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபடுகின்றன. பல்வேறு நாடுகளில் உறுப்பினர்களையும், கிளைச் சங்கங்களையும் கொண்டு இயங்கின்றன இந்தச் சங்கங்கள். இந்தச் சங்கங்கள் எல்லாம் ஆங்கில - மொழி, இலக்கியம், கலை, பண்பாட்டுத் துறைகளில் பல வெளியீடுகளை வெளியிட்டும், காலாகாலத்தில் இவை சம்பந்தமான ஆராய்ச்சி உரைகள் நிகழ்த்தியும், இந்த உரைகளை அச்சேற்றி வெளியிட்டும் வருகிறார்கள். பல்வேறு நாடுகளும் ஆங்கில — மொழி, இலக்கிய, கலை பண்பாட்டுத் துறைகளில் நாளுக்கு நாள் நடந்துவரும் முன்னேற்றங்களைப் பற்றி அறிந்து, அவற்றில் தாமும் கலந்து முன்னேறுகின்றன. இதே அடிப்படையில் இயங்கும் அகில உலக தமிழ்ச் சங்கம் ஒன்று அவசியம் உடனடியாகத் தேவை. (The International Tamil Association). தமிழுக்காகத் தனித்து இயங்கும் சங்கம் உருவிலும் சாதனையிலும் சிறிதாக இருக்குமாதலால் திராவிட மொழிகள் அனைத்திற்கும் பொதுவாக அகில உலக திராவிட அறிஞர்கள் சங்கம் ஒன்றை நிறுவலாம். இதில் இலக்கியங்கள், கலைகள், பண்பாடுகள் சம்பந்தமான ஆராய்ச்சிகள் இடம்பெற வேண்டும். வேறு பல சிறப்பு வெளியீடுகளையும் வெளியிடலாம். இந்தச் சங்கத்தின் ஆதரவில் ஆண்டுக்கு ஒரு முறையாவது திராவிடவியல் அறிஞர்கள் மாநாடு நடத்தப்பட வேண்டும். பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் கலந்து கொள்ள வேண்டும். அகில உலக கீழ்த்திசைத்துறையினர் மகாநாடு ஐரோப்பிய நாடுகளில், பொன், மியூனிச் போன்ற நகரங்களில் நடக்கின்றன. ஆனால் தமிழ்ப் பிரதிநிதிகளோ திராவிடப் பிரதிநிதிகளோ இல்லாமல் 1960-இல் மாஸ்கோவில் நடந்த மகாநாட்டில் மட்டும் சிலர் கலந்து கொண்டனர். மற்றும் வியன்னா போன்ற நகரங்களில் சர்வதேச தொல்நூல், இனநூல் அறிஞர்கள் மகாநாடு நடைபெறுகின்றது. அதுவும் தமிழ்ப் பிரதிநிதிகளோ திராவிடப் பிரதிநிதிகளோ இல்லாமல் 1953-ம் ஆண்டு மட்டில் நடந்த இந்த மகாநாடு ஒன்றில் திராவிடப் பிரச்சனை ஆராயப்பட்டது. ஆனால் திராவிடப் பிரதிநிதிகள் யாரும் கலந்து கொள்ளவில்லை. காலாகாலத்தில் நிகழ்த்தப்படும் ஆராய்ச்சிகளும் அவ்வப்போது வெளியிடப்பட வேண்டும். ஓரளவில் இந்த இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது சென்னை தமிழ்க் கலை மன்றம். இந்த மன்றத்தின் ஆதரவில் 'தமிழர் சால்பு' (Tamil Culture) என்ற காலாண்டு ஆராய்ச்சி ஏடு வெளிவருகிறது. இந்த மன்றமே இந்த முயற்சியில் இறங்கலாம். இந்த மன்றத்திற்கு வேண்டிய உதவிகளையும், ஊக்கத்தையும் கொடுத்து ஆக்கத்துறைக்கு அழைத்துச் செல்ல வேண்டியது தமிழ் ஆர்வம் உள்ள அனைவரின் கடமையாகும். எனவே, இந்த முயற்சியை இப்பொழுதே தொடங்குவதற்கு இது ஏற்ற தருணம் என்பதை மறுக்க முடியாது. இதை உணர்ந்து தான் டாக்டர் கமில் ஸ்வலெபில் (செக்கோஸ்லவேக்கியா) ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே பின்வருமாறு கூறினார்:-"அறிஞர்களினதும் ஆராய்ச்சி நிலையங்களினதும் சர்வதேச கூட்டுறவு ஒன்றை ஏற்படுத்தக் காலம் கனிந்திருக்கிறது". காலம் கனிந்திருந்தாலும் தமிழர் இதயமும் கனிய வேண்டுமே! சந்தர்ப்பம் இருக்கிறது — அதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் — அது நம்மைத் தேடி வராது.

### செல்வாக்கு இல்லை

எந்த மொழியின் வாழ்விலும் அந்த மொழியை அந்த அரசு ஆதரிக்கும். இல்லையென்றால் அந்த மொழி நீடு வாழவோ வளரவோ முடியாது. அந்த மொழி பேசும் மக்கள், தனித்து, உயர்ந்த வளர்ச்சியையோ நீண்ட வாழ்வையோ அளித்துவிட முடியாது. தமிழ் மொழியை இன்று மலாயா, இலங்கை போன்ற நாடுகளில் கணிசமான அளவில் மக்கள் பேசியும் பயன் படுத்தியும் வந்த பொழுதிலும், இந்த நாடுகளில் தமிழ்மொழிக்கு அரசியல் செல்வாக்கு இல்லை. பாரதி பெருமையுடன் பாடிய "தமிழ்த் திருநாட்டில்" (சென்னையில்) மாத்திரம் தமிழ் மொழிக்கு சற்று செல்வாக்கு உண்டு. தமிழ் நாட்டு அரசு (சென்னை அரசு) தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கி உள்ளது. "தமிழ் இந்த நாட்டின் ஆட்சி மொழி'' என்று ஒரு வரியில் சட்ட ஏட்டில் எழுதி வைத்துவிட்டால் மட்டும போதாது. அதை எழுதி வைப்பதற்குப் பின்பு இருக்கும் பொறுப்பும் கடமையும் மிகப் பெரியது.

### மேனாடுகளில்

இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் மக்களும் மக்கள் மன்றங்களுமே இத்தகைய பணிகளைச் செய்கின்றன. ஆனால் அதே நிலையைத் தமிழ்நாட்டில் எதிர்பார்க்க முடியாது. தமிழ் நாட்டின் நிலை, தமிழ் மக்களின் நிலை அந்த அளவுக்கு உயரவில்லை; வளரவில்லை. எனவே தமிழ் நாட்டு அரசுதான் இதற்குக் கைகொடுத்து உதவ வேண்டும். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் மொழி இலக்கிய வளர்ச்சிக்கு அரசாங்க உதவியும் ஏராளம் உண்டு. ரஷ்யா, ருமேனியா, செக்கோஸ்லவேக்கியா, செஞ்சீனா போன்ற சோஷலிஸ நாடுகளில் அரசாங்கமே மொழி, இலக்கியம் சம்பந்தமான முழுப்பொறுப்புகளையும் கூட ஏற்று நடத்துகின்றது. ரஷ்யாவில் சோவியத் எழுத்தாளர்களுக்கு சோவியத் எழுத்தாளர் மாமன்றம் பண உதவி கொடுக்கிறது. இந்த மாமன்றத்திற்கு அரசாங்கம் பணம் கொடுத்து வருகிறது. சோவியத் எழுத்தாளர்களின் இலக்கியங்களை இந்த மாமன்றம் வெளியிட்டும், பல்வேறு சோவியத் மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டும் வருகின்றது. இப்படிப் பலவகையில் சோவியத் அரசாங்கம் மொழி, இலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டாற்றிவருகிறது. ஏனையசோஷலிச நாடுகளிலும் இதே நடைமுறை இயங்கிவருகிறது. வெளிநாடுகளிலும் தமது இலக்கியங்களைப் பரப்புவதற்காக ஆங்கிலம் போன்ற பிறமொழிகளில் தமது இலக்கியங்களைப் பெயர்த்து வெளியிடுகின்றன. சோவியத் நாட்டில் இருந்து 'சோவியத் இலக்கியம்' என்ற மாத இதழையும், சீன நாட்டில் இருந்து "சீன இலக்கியம்" என்ற இரு திங்கள் இதழையும் நாம் பார்க்கிறோம். இப்படியே பல்வேறு அரசுகளும் தத்தம் மொழிகளுக்குப் பெரும்பணி ஆற்றிவரும்பொழுது நம் தமிழ்நாட்டு அரசு சொற்ப அளவிலாவது தமிழ் மொழிக்குப் பணி செய்யக் கூடாதா!

### போதாது

இப்பொழுது தமிழ்நாட்டு அரசு தமிழுக்காக ஒன்றும் செய்யவில்லை என்பதல்ல. இப்பொழுது செய்யப்படுவது போதாது. சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குவதுபோன்ற தொண்டுகளால் தமிழ்மொழி பரவுவதற்கும் புதுத்துறையில் வளர்ச்சி அடைவதற்கும் அதிகம் ஆக்கம் கிடைத்துவிடாது. தமிழ்நாட்டு அரசாங்கம் ஒரு ஆண்டுக்கு இரண்டு வெளிநாட்டாருக்காவது தமிழ் படிக்க படிப்புதவி அளிக்க வேண்டும். இப்படித்தான் தமிழ்மொழியைப் பரப்ப முடியும்; பிறநாட்டாருக்குத் தமிழ் மீது ஊக்கம் கொடுக்க முடி

(10ம் பக்கம் பார்க்க)

"நான் லண்டன் போய்ச் சேர்ந்தேன். பிரிட்டிஷ் அதிகாரிகளோடு பேச்சு வார்த்தைகள் ஒழுங்காயிற்று. இந்தப் பேச்சு வார்த்தைகளின் போது அனுஷ்டிக்கப்பட வேண்டியிருந்த இராஜதந்திர நடவடிக்கை ஒன்றினைச் சொல்லிவைக்க விரும்புகின்றேன்."

# இராஜதந்திரப் பேச்சு வார்த்தை

**மந்திரியாக இருந்த காலம்: லண்டனில் பேச்சுவார்த்தைகள்: பிரிட்டிஷ் மந்திரி பாராட்டு: ஒலிவரின் திடீர் விஜயம்: புதிய ஒப்பந்தம்: பிரஜாவுரிமைச் சட்டம்: பதவி நீக்கம்**

— பேராசிரியர் செ. சுந்தரலிங்கம் —

## ஈழப்பாட்டனின் கடிதங்கள்: 11

"ஹறீன் வாசா",
லிங்கம் தோட்டம்,
வவுனியா, 9-4-62.

எனது அருமையான
ஹறீன்,

வர்த்தகம், வர்த்தக அபிவிருத்தி மந்திரியாக நானிருந்தபோது இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களின் விற்பனையால் எமது நாட்டுக்கு ஆகக்கூடிய அதிக பணத்தைப் பெற்றுக்கொடுக்கும் உபாயங்களையும், வழிவகைகளையும் கையாளுவதில் அக்கறையோடு முயற்சி கொண்டேன். முக்கியமாக கொப்பரு, தேங்காய் எண்ணெய் மற்றும் தென்னைப் பிரயோசனங்களுக்கே முதல் கவனம் செலுத்தினேன்.

ஒலிவர் குணத்திலக்காவினுல் அதிகரிக்கப்பட்ட ஏற்றுமதித் தீர்வை வரிக்குப் பின்னர் இலங்கையின் கொப்பரு, தேங்காய் எண்ணெய் ஆகிய பொருள்களுக்கு அதிகப்படியான பெறுமதியை அரசாங்கம் பெறமுடிந்தது. ஆயினும் அந்த அதிகப்படியான பெறுமதி உலக சந்தையில் அப்பொருள்களுக்குள்ள விலை நிர்ணயத்திலும் எவ்வளவோ குறைந்ததாகவே இருந்தது. அந்த ஒப்பந்தத்தை ஆதியோடந்தமாய் அலசி ஆராய்ந்தேன். அதிலிருந்து "தப்பக்கூடிய நிபந்தனை" ஒன்று எனக்கு அகப்பட்டது. அப்பொருள்களுக்கு, குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளுக்கமையவும், விசேட சந்தர்ப்பங்களின் கீழும் இலங்கை அரசாங்கம் இன்னும் கூடியவிலை நிர்ணயத்தை நியாயமான முறையில் கேட்டுப்பெற வசதியாகவிருந்தது. இலங்கை செய்யவேண்டியதாவது: அந்தக் கட்டுப்பாடுகளும், சந்தர்ப்பங்களும் உண்மையில் உண்டாகிவிட்டன என்னும் நிலைமையைச் சுட்டிக்காட்டி நிரூபித்தலாகும்.

### எனது திட்டம்

எனது திட்டத்தைத் தயார் செய்யத் தொடங்கினேன். ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள் கொள்வனவு இலாக்கா அதிபராக அன்று கடமையாற்றிய எட்மண்ட் ஜே. கூறே (பின்னர் செனேட்டராக நியமனம் பெற்ருர்), சக்தி, சமார்த்தியம் மிக்க எனது அன்றைய அந்தரங்கக்காரியதரிசி பி. ஆர். தேவராஜன் (இப்போது உப்பு இலாக்கா) அதிபர்) முன்னைநாள் வர்த்தகத்துறை அதிகாரி திரு. ஸி. ஈ. பி. ஜயசூரியா, இந்த ஏற்றுமதி, இறக்குமதிப்பொருள்கள் கொள்வனவு இலாக்காவின் அப்போதைய ஊக்கம் நிறைந்த பிரதம லிகிதர் கே. சி. நித்தியானந்தன் ஆகிய உத்தியோகத்தர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பலமுறை ஆராய்ந்து ஆலோசித்து முடிவு செய்தனர். பல நாட்களாக கந்தோர் நேரம் தவிர்ந்த மேலதிகமான நேரங்களுக்கு அவர்கள் கடுமையாக வேலைசெய்தார்கள். பாவம்! அவர்கள் செய்த மேலதிக வேலைக்காக அவர்கள்மீதிரங்கி அவர்களுக்கு மேலதிக வேதனம் பெற்றுக்கொடுப்பதற்கு தொழிற்சங்கங்கள் ஒன்றேனும் அப்போது முன்வரவில்லை! ஆனல் மந்திரி மாத்திரம் உபசாரத் தேநீர் விருந்தளித்தார்!! அந்த உத்தியோகத்தர்கள் நன்னேக்குடன் நற்பணி செய்தார்கள்; கடமையைச் செய்து திருப்தி அடைந்தார்கள்!!

இதன்பயனுக, சரியான தோர் விபர விளக்க விமர்சனம் தயார் செய்யப்பட்டுப் பிரித்தானிய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டது.

"கடதாசிக் கவலை" தான் அதற்கு நாம் அவர்களிடமிருந்து முதலாகப் பெற்றுக்கொண்ட பதிலாகும். நான் மந்திரி சபைக்கு இவ்விஷயத்தைக் கொண்டுசென்று நிலைமையைத் துலாம்பரமாக விளக்கினேன். லண்டன் சென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு இவ்விஷயம்பற்றி நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டுமென்று எடுத்துக்கூறி மந்திரிசபையை அதற்கு இணங்கும்படி ஏவினேன். பெருந் தர்க்கத்தின்மேல் சம்மதமென மந்திரிசபை தீர்மானம் செய்தது. அப்போது முன்னர் சென். ஜோசெப்ஸ் கல்லூரியில் எனது மாணவனும், பின்னர் மந்திரிசபையில் நீதி மந்திரியாக இருந்த எனது நண்பனுமான லலிதா ராஜபக்ஸ "பிரியாவிடைப்பாணம்" ஒன்றினை வேடிக்கையாக என் மீது தொடுத்தார். "சுந்தரர், இங்கிலாந்து போகிருர்; பெருங்கவலை அடைவார்; திரும்பி எம்முன் வருவார்; எனினும் புத்தி பெறுவார்." மந்திரி சபையில் எல்லார் மனத்திலும் குடிகொண்டிருந்த உணர்ச்சி இதுவாகும். ஒலிவர் படுதோல்வியடைந்த விடயத்தில் நான் ஒருபோதும் வெற்றியடையப்போவதில்லை என்பதுதான் அவர்கள் எண்ணம்.

### லண்டன் விஜயம்

நான் லண்டன் போய்ச் சேர்ந்தேன். பிரிட்டிஷ் அதிகாரிகளோடு பேச்சுவார்த்தைகள் ஒழுங்காயிற்று. அந்தச் சந்தர்ப்பத்தில் லண்டனிலும், இலங்கையிலும் நடந்த சம்பவங்கள்பற்றிய விபரங்களை இங்கு இப்போ குறிப்பிடச் சந்தர்ப்பமில்லை. இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது அனுட்டிக்கப்படவேண்டியிருந்த இராஜதந்திர நடவடிக்கை ஒன்றினை உங்களுக்கு நான் சொல்லிவைக்க விரும்புறேன். அதை நீங்களும் அறிந்திருந்தால் உங்கள் நாளில் தேவை ஏற்படும்போது பயன்படுத்திக்கொள்ள உதவும்.

எவரும் எதிர்பாராதவிதமாகவும், வெற்றிகரமாகவும் கொப்பரு, தேங்காய் எண்ணெய் ஆகியவற்றுக்குக் கூடிய விலையைப் பேச்சில் பொருந்திக் கொண்டேன். மறுபக்கத்தில் எனது சக நண்பராகப் பேச்சு வார்த்தையின்போது தலைமை தாங்கியவர் பிரிட்டிஷ் உணவு மந்திரி ஸ்ற்றச்சி ஆவர். புது ஒப்பந்தத்தில் நிபந்தனை ஒன்றைச் சேர்க்கவேண்டுமென அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார். அதாவது, நாங்கள் மீண்டும் ஆராய்ந்து அதிகரித்த விலை நிர்ணயத்தை வருடாவருடம் மறுபடியும் ஆராய்ந்து நிலைமைக்கேற்ப மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான் ஸ்ற்றச்சியின் பிடிவாதமாகும். பழைய விலையிலும் பார்க்க அப்பொருள்களின் விலை ஒருபொழுதேனும் குறைக்கப்படாமலிருக்க உத்தரவாதம் தந்தால் நான் அவரின் நோக்கத்திற்குச் சம்மதம் கொடுப்பேன் என்றேன். அவருடைய ஆலோசனை உத்தியோகத்தர்களின் தூண்டுதலினுல் எனது விருப்பத்திற்கிணங்க மறுத்து விட்டார் ஸ்ற்றச்சி. அப்போது நான் பின்வருமாறு கூறினேன்: "ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளை இந்தளவில் நிறுத்திவிட வேண்டிவரும்போலத் தெரிகிறது. நான் உடனே இலங்கைக்குத் திரும்பிச்செல்ல உத்தேசிக்கின்றேன். திரும்பமுன் எனது பிரமத மந்திரியுடன் கேபிள்மூலம் தொடர்புகொண்டு இதைப்பற்றி அறிவிக்க வேண்டும். பின்னர் என்னுகுமோ எனக்குத் தெரியாது." உடனே டி. எஸ். ஸுக்கு நிலைமையை விளக்கி கேபிள்மூலம் செய்தியை அனுப்பினேன். அதிலே நான் டி. எஸ். ஸைக் கேட்டுக்கொண்டது இவ்வளவும்தான்: "பிரிட்டிஷ் உணவு மந்திரிக்கு நான் கூறிய பயமுறுத்தல் பேச்சையும், பிரிட்டிஷ் அரசாங்கத்தை அச்சுறுத்தும் எனது போக்கையும் சரியென அங்கீகரிக்கவேண்டும். அப்போதுதான் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திக் காரியத்தை அனுகூலமாக்க எனக்குப் பலமேற்படும்."

### ஊன்றிப் பதிந்தன

சீமைச் சர்வகலாசாலையில் நான் ஒரு பட்டதாரி மாணவனுகப் படித்த நாட்களில் கற்றறிந்த பாடமொன்றை அனுகூலமான, அனுபவவாயிலான செயல்முறையில் கையாண்டு பலன்பெறவிரும்பியே இந்தக் கேபிள் செய்தியை அனுப்பியிருந்தேன். இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளில் பிரிட்டிஷார் ஒரு பகுதியாக இருநதுகொண்ட ஒப்பந்தங்களின் வரலாறுகளையும் நான் துருவிப் படித்திருந்தேன். இந்தியன் சிவில்சேவைப் பரீட்சைக்கு இக்கால ஐரோப்பிய சரித்திரத்தையும் ஒரு பாடமாக எடுத்தேன். அதற்குச் சில பாடப்புத்தகங்கள் வரையறுக்கப்பட்டிருந்தன. பிஸ்மாக்கின் "பழைய நினைவுகள்" மெயிட்டெனிச்சின் "வாழ்க்கை வரலாறுகள்" கவூர், மஸினி, கரிபோல்டி ஆகிய இத்தாலிய மாவீரர்களின் சீவியசரித்திரங்கள், முதலாவது மம்ஸ்பெரி பிரபுவின் 'லைல் சமாதானப் பேச்சுவார்த்தைகள்" என்பன எனது உள்ளத்தில் ஊன்றிப் பதிந்தன. "லைல் சமாதானப் பேச்சுவார்த்தைகள்" நெப்போலியன் யுத்தங்கள் நடந்த காலத்தில் டச்சுக்காரர் ஆதிக்கத்திலிருந்த இலங்கையை நேரடியாகப்பாதித்த பல முக்கிய அம்சங்களைக் கொண்டது. லைல் பிரபு எவ்வளவு திறமையுடனும், விவேகத்துடனும் செயலாற்றினர்; கடமையிற் கண்ணும் கருத்துமாயிருந்தார்; அவரின் பெருமுயற்சியில் வெற்றியான முடிவு காணவேண்டுமென்று அக்கறை கொண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் அவருக்கு எவ்வித வழிதுறைகளை நியமித்தார்கள்— இவைகள்யாவும் என் மனதில் என்றும் மறக்கமுடியாத அனுபவ ஞானம்மிக்க போதனைகளாய் அமைந்துவிட்டன.

டி. எஸ். ஸிடம் நான் அங்கீகாரம்கேட்டனுப்பிய கேபிளுக்குப் பதில் விரைவில் கிடைத்தது. அது எதிர்பார்த்ததிற்கு முற்றிலும் முரணுன முறையில் இருந்தது. "பேச்சுவார்த்தைகளின் பொறுப்புகளை ஒலிவரிடம் ஒப்படைத்து விட்டு உடனே இலங்கைக்குத் திரும்பவும்" என்பதுதான் பதில்! அதைப்படித்த எவருக்கும் உடனே "நாடி விழுந்து போய் விடும்" அல்லவா? நானே இந்தக் கேபிள் செய்தி பற்றி வேறெவரோடும் பேசவில்லை. இரகசியகாகக் கேபிளைச்சுருட்டி எனது சட்டைப் பையுள் போட்டுவிட்டேன். டி. எஸ். ஸுக்கு என்னுடைய நோக்கம் எள்ளளவும் விளங்கவில்லை என்பதை நான் நன்குணர்ந்ததோடு, அவரின் உள்நோக்கமும் எதுவாகஇருக்கலாம் என்பதையும் புரிந்துகொண்டேன். டி. எஸ். என்னையே விளங்கத் தவறிவிட்டார்! ஆனல் நான் அவரை "உள்ளும் புறமும்" அறிந்துவிட்டேன்!!

### கோடன் வாக்கர்

ஒலிவருடன் பிரிட்டிஷ் அதிகாரிகள் மனம் விட்டுப் பேச்சில் கலந்துகொள்ள மாட்டார்கள் என்பது எனக்கு விளங்கும். ஒலிவர் சட்டமூலம் தீர்வை வரியை ஏற்றியதாகிய அந்த 'யோக்கியமற்ற செய்கை' இருக்கிறதே — அதை அவர்கள் ஒருபோதும் மறக்கவோ, மன்னிக்கவோ மாட்டார்கள். அவர்களுக்கு அது சதா மன அழற்சியை ஏற்படுத்திய வண்ணமிருந்தது என்பதை நான் ஊகித்துக்கொண்டேன். அப்போது கோடன் வாக்கர் சாம்ராஜ்ய உறவுமந்திரியாக இருந்தார். அவர் என்னுடன் நெருக்கமாகத் தொடர்புகொண்டு, தங்கள் சார்பில், பேச்சுவார்த்தைகள் ஒழுங்காகவும், முரண்பாடற்ற முறையிலும் போய்க் கொண்டிருக்கிறதா என்பதைக்கவனித்து, ஆகவேண்டிய அத்தனை அலுவல்களையும் ஆர்வத்துடன் அவ்வப்போது ஆற்றிவந்தார். "எனது பிரதமமந்திரி என்னை உடனடியாக இலங்கைக்குத் திரும்பிவரும்படி உத்தரவு அனுப்பியிருக்கிருர்" என்று அவரிடம் தெரிவித்தேன். ஆனல், ஒலிவரிடம் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தும் பொறுப்பினை ஒப்படைக்கச் சொன்ஞர் என்பதை மட்டும் சொல்லாது வேணுமென்றே ஒழித்துவிட்டேன். அரசியல் விஷயங்களில் அரைப்பொய் பேசுதல் சில சந்தர்ப்பங்களில் முறையாகும். கோடன் வாக்கர் என்மீது மதிப்புடையவராக இருந்தார். நான் கடைப்பிடித்த வழிமுறையை அவர் மெச்சிப் பாராட்டினர். எனது வேண்டுகோள் நியாயமானது என்று கண்டு எனது போக்கில் அடங்கியிருந்த அரசியல் சிக்கல்களையும், முக்கியத்துவங்களையும் அவர் விளங்கி அனைத்தையும் சரியானவைதான் என்று ஏற்றுக் கொண்டார். தாமதமின்றித் தனது சகமந்திரி நண்பரான ஸ்ற்றச்சியுடன்

(10ம் பக்கம் பார்க்க)

மிகத் திறமையான
பவர்ஸ்
உரங்கள்
கிருமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்
லாபகரமாய் பயிரிட
- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை
மற்றும் பழவகைகளும்
கிடைக்குமிடம்
ஏ. பவர்
அன் கொம்பனி லிமிட்டெட்,
த. பெ. 11, கொழும்பு.

பெண்மை விழிப்படைந்து விடும்; லலிதாவைத் தீண்டியவனுக்கு நேர்ந்த அதேகதிதான் கைலாசுக்கும் கிடைக்கும் என்று அவன் எதிர்பார்த்தான். "ஆனால் .....? ஆனால் .....? என் நல்லெண்ண ஏற்றத்திலிருந்து மறுகணம், அவள் கீழே .... கீழே ... உருட்டிவிடப்பட்டாள். தூ! லலிதா ...... சித்திரா! இருவரும் பெண்கள்; தமிழ்ப் பெண்கள் தான்."

# விழிப்பு

## சிறுகதை

## 'செங்கை ஆழியான்'

இது ஒரு சிறு கதை—

"லலிதா என்று ஓர் அழகி; அவள் அழகானவள் மட்டுமல்ல, எல்லாரோடும் சகஜமாகப் பழகுவாள்; அதுதான் அவளுக்கு ஆபத்தாக முடிந்தது. அவளோடு படித்த மாணவர் சிலர் அவள் தங்களுடன் பழகுவதைத் தவறாக அர்த்தம் கற்பித்துக்கொண்டார்கள்.

'அவள் என் மேல் காதல்!...' என்று ஒருவன் எண்ணினான்.

இதைக் கேட்டு மற்றவன் சிரிப்பான்; 'அவள் தன்மேல் ஒரு கண் ....!' என்பது அவனது எண்ணம். இப்படி ஒவ்வொருவரும் தவறாக எண்ணிக் கொண்டார்கள். அந்த எண்ணம் அவளோடு மேலும் நெருங்கிப் பழக அவர்களை வைத்தது. அவளும் சகஜமாகவும், நாகரிகமாகவும் பேசினாள்; பழகினாள்.

'ஹலோ, லலிதா!...' என்று விளித்துக் கைநீட்டினால், அவளும் கைபற்றிக் குலுக்குவாள்.

ஒருநாள் அம்மாணவர்களில் ஒருவன் தற்செயலாக அவளைத் தனிமையில் சந்திக்க நேர்ந்தது.

தனிமை —

வெறி மூண்டது! அவளை எட்டிப் பிடித்து இழுத்து அணைத்தால் அவள் தடுக்கமாட்டாள் என்று அவன் திடமாக நம்பினான்; எண்ணியபடியே செய்தான்.

மறுகணம் அவள் அடிபட்ட வேங்கையானாள்; அவள்விழித்துக் கொண்டாள். 'பளார்... பளார்...' என்று அவன் கன்னத்தில் அவள் வலது கரம் படிந்தெழுந்தது; ஏனெனில் அவள் பெண்; அதுவுந்தமிழ்ப் பெண்!..."

இக் கதையைப் படித்த போது நான் மிகவும் உணர்ச்சிவசப் பட்டுவிட்டேன். சகஜமாகப் பழகியதைத் தவறாகக் கருதிக் கொண்டு நடக்கமுயலும் சிலருக்கு நல்ல 'அடி' கொடுக்கக்கூடியகதை. இக்கதையை என்னோடு பயிலும் சகமாணவ நண்பர்களுக்குப் படித்துக்காட்ட வேண்டும் என எண்ணிக் கொண்டேன்.

'டக் ... டக் ... டக் ....' அறைக்கதவு தட்டப்பட்டது; நான் எழுந்து போய்க் கதவைத் திறந்தேன்.

"வாடா வா! 'ஹோலி'லிருந்தா வருகிறாய்? ..."

கைலாஸ் உள்ளே வந்து அமர்ந்தான். நான் இருப்பது ஒரு விடுதி; அவனிருப்பது இன்னொரு விடுதி.

"என்னடாப்பா! உங்கடை 'ஹோலி'ற்கு வருவதென்றால் உயிர் போய்விடுகிறது! இந்த மலையுச்சியிலே கொண்டுவந்து இதைக்கட்டி வைத்தான்களே...!" என அலுத்துக் கொண்டான்: "நீ எப்படித்தான் இங்கிருந்து 'லெக்சரு'க்கு வருகிறாயோ? ..."

அவன் ஒரு சிகரட்டை எடுத்து வாயில் வைத்துவிட்டு நிமிர்ந்து பார்த்தான்.

"என்னிடம் நெருப்புப் பெட்டி இல்லை! பக்கத்தறையில் வாங்கித் தருகிறேன் ...!" என்ற நான், பக்கத்தறையில் இருக்கும் சிங்கள நண்பனைக் கூப்பிட்டேன்: "பெரேரா! தமுசகாவ கினிப்பெட்டி தியன்னவாத?..."

"தியன்னவா!..." என்றபடி நெருப்புப் பெட்டியைக் கொண்டுவந்து தந்தான்.

கைலாஸின் உதடுகளில் 'சிகரெட்' ஆடியது; அதனிடையே அவன் கேட்டான்: "நீ இப்போது சிகரட் பிடிப்பதில்லையா? ..."

"இல்லை! விட்டு விட்டேன் ...!"

"ஏன் .... ?"

"விருப்பமில்லை! அது சரி... உன் வாழ்க்கை எப்படிப் போகுது ....?" — இக் கேள்வியைப் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொருவரும் கேட்பார்கள்.

கைலாஸ் சற்று மௌனமாக விருந்தான்; பின், புகையை ஊதியபடியே, "முதலில் வந்தபோது பிடிக்கவில்லை! இப்போது இன்பமாக - இனிமையாக விருக்கிறது...!" என்றான்.

பல்கலைக்கழக வாழ்க்கை ஒருவனுச்குப் பிடித்திருக்கிறதென்றால், அதற்கு ஒரேயொரு காரணந்தான் என்னைப் பொறுத்தமட்டில் இருக்கிறது; 'காதல் தோன்றியிருக்கவேண்டும் . . .!'

"மிஸ் பெரியதம்பியைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? . . ."

"யார், சித்திராவைப் பற்றியா? . . ."

"ஆமாம் ! . . ."

"நல்ல பெண்! அழகானவள்! எல்லாரோடும் சகஜமாகப் பழகுவாள்! . . ."

புகை வளையங்கள் உச்சி முகட்டைத் தொடமுடியாது சிதைந்து கலைந்தன.

"அவள் என்னிடம் வலைகிறாள்! . . . ."

எனக்கு இது திகைப்பைத் தரவில்லை; பல்கலைக்கழகத்தில் இவ்வார்த்தைகள் சர்வசாதாரணமானவை. நான் சிரித்தேன்.

"ஏன் சிரிக்கிறாய்? ... நீ இதை நம்பவில்லையா? . . ."

"எதைக்கொண்டு இதை நீ கூறுகிறாய்? . . ."

"அவள் என்னோடு நெருங்கிப் பழகுகிறாள்! என்னைக் கண்டபோதெல்லாம் சிரிக்கிறாள்! உனக்குத்தெரியாது ... அவள் என்னோடுபேசும்போது கண்களை ஒருவிதமாகச் சிமிட்டியபடிதான் கதைப்பாள்!..."

"அதனால், அவள் உன்னை விரும்புவதாகக் கருதுவதா? கைலாஸ்! எனக்கு அவளை நன்கு தெரியும்! அவள்கொழும்பைச் சேர்ந்தவள்! அதனால் எல்லாரோடும் சகஜமாகப் பழகுகிறாள்! உன்னைப்போலத் தான் இன்னும் சிலர் எண்ணியிருக்கிறார்கள்! ஒரு பெண் சகஜமாகப் பழகினால், சிரித்தால், தப்பாக எண்ணிக் கொள்வதா?...." - இவற்றை நான் கூறும்போது, சிறுகதையில் சற்றுமுன் படித்த லலிதா நினைவில் தோன்றினாள்.

அவன் பார்வையில் ஆத்திரம்.

"போடா போ! உனக்கு என்ன தெரியும்? சித்திராவைச் சுலபமாக ....!! ...."

நான் 'கட கட' வெனச் சிரித்தேன்; என் சிரிப்பில் அவன் நினைவைத் தூக்கியெறியும் அலட்சியம் தொனித்தது.

"கைலாஸ்! உனக்குப் பெண்மையைப் பற்றிப் புரியாது! தப்பர்த்தங்கொண்டு, அவளிடம் தவறாக நடந்து விடாதே! கடைசியில் பெண்மைவிழித்துக் கொள்ளும் ....!"

"நீ கதை எழுதுகிறவன்... அந்தப் பெண்மை, விழிப்பு என்பதெல்லாம் கதைக்குத் தான் சரி! வேணுமென்றால் சித்திரா உன் இலட்சியக்கதாநாயகியாக இருக்கலாம்! உன் கதையில் வேணுமென்றால் அவளை விழிப்படையவை ...!" என்று கோபமாக வார்த்தைகளை வீசினான்.

பெண்மை என்றால் எப்படிப்பட்டது என்பது எனக்குத் தெரியும்; பெண் குலத்தின்மேல் எனக்கு என்றும் மதிப்பும் நல்லெண்ணமும் உண்டு; பெண்கள் தியாக உருவங்களென்றும், தெய்வஉருவங்களென்றும் கருதினேன்; நான் அவ்வாறு கருதக் காரணமிருக்கத்தான் இருந்தது.

சிறுவயதிலேயே நான் தந்தையை இழந்து விட்டேன்; அவர் இறந்திருந்தால் என் துன்பம் விரைவில் ஆறியிருக்கும்; ஆனால், அவரோ எனக்கு ஐந்து வயது நடக்கும்போது யாரோ ஒருத்தியுடன் ஓடிவிட்டார். அதன்பின் தாயின் அரவணைப்பிலேயே வளர்ந்தேன். காணி பூமி இருந்ததால் குடும்பம் கஷ்டமில்லாமல் ஓடியது. உணவு மட்டும் இருந்தால் போதுமா—வாழ்க்கை சந்தோஷமாக ஓட?

தந்தையில்லாக் குறை என்னை அதிகம் பாதிக்கவில்லை; ஆனால், கணவனில்லாத குறை என் தாயைப்பெரிதும் பாதித்தது. எனினும் தன் துன்பத்தை வெளிக்காட்டாது, தனக்குள்ளேயே குமைந்து குமைந்து சாவதை நானறிந்தும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

"நீயில்லாட்டிராசா, எனக்கு சீவிக்கிறதுக்கு இங்கை என்ன இருக்கு!... " என்று என்தாய் சில வேளைகளிற் கூறுவாள்.

எனக்காக அவள்படும் துன்பங்கள் - தன் கணவனை வேறொருத்திக்குத் தாரைவார்த்துவிட்டுப் படும் வேதனை - இவையெல்லாம் அவளைத் தெய்வமாக, தியாகவுருவமாக என்னை மதிக்க வைத்தன. தாயைப்போலவே பிறபெண்களையும் தியாகவுருவங்களாக மதித்தேன்; அதனால், பெண்களிடம் எனக்கு ஒரு தனிமதிப்பும், நல்லெண்ணமும் இருந்தது.

நான் பல்கலைக்கழகத்திற்குப் பட்டப் படிப்பிற்காக வந்த பின்புகூட அந்த நல்லெண்ணந் தேயவில்லை. பெண்களோடு பழகும்போதெல்லாம் மரியாதையாகப் பழகினேன்.

கைலாஸ் கூறியவற்றைக் கேட்டநான் அவனுக்காக இரக்கப்பட்டேன். அவனைக் கோபமடையச் செய்து வேடிக்கைபார்ப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. ஒரே பள்ளியில் படித்து ஒன்றாகவே பல்கலைக்கழகத்துக்குள் காலடி வைத்தவர்கள் நாங்கள்.

"உனக்காகப் பரிதாபப்படுகிறேன், கைலாஸ்!" என்றேன். 'விர்' என்று எழுந்தான்; நான் தொடர்ந்தேன்: "அவளுக்கு ஊரில் ஒருகாதலன் இருக்கிறானாம்? . . ."

"இருந்தால் எனக்கென்ன? அவள் ஒரு ஆட்டக்காரி! அவளை என்னால் 'ஷேப்'பண்ண முடியும்! .. .'

நான் காதுகளைப் பொத்திக் கொண்டேன்; லலிதா என் கண்களில் நிழலாடினாள்.

"அபத்தமாகப் பேசாதே! அவள் என்னோடும் சகஜமாகத் தான் பழகுகிறாள்! ... நான் உன்னைப்போல எண்ணவில்லையே.....?"

"நீ எண்ணாவிடில் எனக்கென்ன?.... நான் போகப் போகிறேன்!.... அவளோடு எக்கச்சக்கமாகப் பழகினால் பெண்மை விழித்துக்கொள்ளும் என்கிறாய்? அதையும் பார்த்து விடுவோம்! நாளை சனிக்கிழமை! 'ஆர்ட்ஸ் தியேட்டரி'ல் படமிருக்கிறது! அவளும் வருவாள்! நீயும் வா! நான் அவள் பக்கத்தில் அமர்ந்து கொள்கிறேன்! படம் தொடங்கியதும் நானவளைக் கட்டி அணைக்கிறேன்! அப்போது அவள் பெண்மைவிழிக்கிறதா என்று பார்ப்போம்.....?"

நான் திகிலோடு அவனைப் பார்த்தேன்:

"விஷப் பரீட்சை கைலாஸ்?...."

"பரவாயில்லை! உனக்குப் பெண்களைக் கணிக்கத் தெரியாது ....!" என்று கூறிவிட்டுப் போய் விட்டான். அவன் போனபின் என்னால் படிக்க முடியவில்லை.

சித்திரா கதையில் படித்த லலிதாவைப் போன்றவள்; அவள் பிரகாசத்தில் மயங்கிய விட்டில்கள் பல—

கைலாஸ் முதல்வன்.

எனக்குப் பெண்களைக்கணிக்கத்தெரியாது என்று அவன் கூறிவிட்டான். பெண்ணினத்தைப்பற்றி அவனுக்கு என்ன தெரியும்? . . .

சனிக்கிழமை —

நான் படத்திற்கு வந்தேன்; தியேட்டருள் வந்த நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். என் கண்கள் கண்டுகொண்டன.

சித்திரா ஒய்யாரமாக அமர்ந்திருக்கிறாள்; அவள் பக்கத்தில் கதைத்தபடி கைலாஸ் இருக்கின்றான்; அவளுக்குப் பக்கத்தில் சகமாணவிகள் அமர்ந்திருக்கிறார்கள்.

என்னிதயம் என்ன கடிகாரமா? சப்திக்கிறதே ...?

அவர்களை, என் பார்வை விழுங்கக்கூடிய இடத்தில் அமர்ந்துகொண்டேன்: 'பாவம் கைலாஸ், என்ன நடக்குமோ?...'

விளக்குகள் அணைந்தன திரையில் என் கண்கள் பதியவில்லை.

'அதோ.... கைலாஸின் கை சித்திராவின் தோளின்மேல் தவழ்கிறது! அவன் கை அவள் கன்னத்தில் கிள்ளுகிறதா? அல்லது ... ...? இதோ ... இதோ . . . சித்திரா விழிப்படையப் போகிறாள்! அவள் பெண்மை விழிப்படையப் போகிறது ...! மறுகணம் .... பளார்பளார் .... கைலாசின் கறுத்தக்கன்னத்தில் சிவப்புத் தழும்புகள் தோன்றப்போகின்றன .....'

ஆனால் ....? ஆனால் ....?

நடந்ததோ ......?

என் நல்லெண்ண ஏற்றத்தில் இருந்து மறுகணம், அவள் கீழே ... கீழே... உருட்டிவிடப்பட்டாள்.

"தூ . . .!"

லலிதா ..... ?

சித்திரா..... ?

இருவரும் பெண்கள்; தமிழ்ப் பெண்கள் தான்.

(யாவும் கற்பனை.)

# அன்பின் ஆற்றல்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணினேனே! அவளது பாடல்கள் உயர்ந்த அன்பின் தன்மையை எடுத்துக்காட்டுகின்றன வாயினும், அவை கோவலனின் உறுதியான உள்ளத்தையே வேரோடு சாய்த்துவிடுகின்றன.

"தம்முடைய தண்ணளியும்
தாமும்தம் மான்தேரும்
எம்மை நினையாது
விட்டனரேல் விட்டகல்க
அம்மென் இணர
அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை
நாம் மறக்கமாட்டேமால்
"கைதைவேலிக் கழிவாய்
வந்தெம்
பொய்தலழித்துப் போனார்
ஒருவர்
பொய்தல் அழித்துப் போனார்
அவர் நம்
மையல் மனம் விட்டகல்வார்
அல்லர்"

கோவலன் இவற்றை வெறும் இசைப்பாடல்களாகக் கருதவில்லை. மாதவி தன் மனத்தில் மறைத்து வைத்தருந்த ஆசையின் வெளிப்பாடு என்றே எண்ணினான். எண்ணியதை சிறிது பொறுமையுடன் இருந்து ஆராய்ந்து முடிவு செய்தானல்லன். அவன் மனத்தில் அவளது குலம் குறுக்கே தோன்றி, அவனது எண்ணத்தைத் திண்ணமாக்கியது. மாதவியை அப்பொழுதே விட்டகன்றான். விளையாட்டு வினையாக முடிந்தது.

எவர் நம்மீது ஐயங்கொள்ளின் எம்முடைய வாழ்வு, செல்வம், இன்பம் எல்லாம் கேடுறுமோ அவர் நம்மீது ஐயங் கொள்ளாத வகையில் நாம் விழிப்பாகவும் தூய்மையாயும் ஒழுகல் வேண்டும். அவ்வாறு நடப்பது நாம் மிகவும் கருத்தோடு போற்றிச் செய்யத்தக்க செயலாகும். அவ்வாறு நடத்தலில் நாம் சிறிது பிழை விடுவோமாயின் அப்பிழையால் வரும் பேரிழவினை நாம் எவ்வகையிலும் ஈடு செய்யவல்லவராக மாட்டோம். இந்த அரிய உண்மையை

"போற்றின் அரியவை
போற்றுக் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது"

என்ற தமிழ்மறை உணர்த்துகின்றது. கோவலனின் மனத்தில் தன்னைப்பற்றித் தவறான எண்ணம் எழுமாயின் அதனை எவ்வாற்றாலும் அகற்ற முடியாது என்பதை மாதவியறியாளாயினள். அவ்வறியாமையினாலேயே கோவலன் பாடியமை போலத் தானும் காதற்பாட்டைத் பாடினள். காதலைக் குறித்த அக்கானல்வரிப் பாட்டு மாதவியோடிருந்த கோவலனின் உறவை அடியோடு அகழ்ந்தெடுத்து விட்டது. பின்னர் அவள் வசந்தமாலையையும் கோசிகனையும் கோவலனிடத்திற்குத் தூதாக அனுப்புகிறாள். அந்தச் சந்தர்ப்பங்களில் முதலில் மிக வெறுத்திருந்த கோவலன் ஈற்றில் மாதவி மேல் பிழையில்லை என்று வெறுப்பு நீங்கினனாயினும் அவளிடத்தில் மீண்டும் சேருட் பற்றுச் சிறிதுமிலனாயினன்.

# உலக மேடை

டி. எம். எம்.

## சீன ஊடுருவல்

லடாக்பிரதேசத்தில் மேலும் ஓரிடத்தில் சீனர்கள் ஊடுருவியிருப்பதாக இந்தியப் பார்லிமெண்டில் அறிவிக்கப்பட்டது. புதிய நிலையம் ஒன்றையும் அவர்கள் அமைத்துக் கொண்டிருப்பதாய்க் கூறப்படுகிறது. இவ்விதச் செயல்கள் மூலம் சீனர்கள் வேண்டுமென்றே இந்தியாவின் ஆத்திரத்தைத் தூண்டிவருகிறார்கள் என்பது இப்போது வெளிப்படையாகத் தெளிவாகி வருகிறது. இந்தியா தனது பொறுமையை இழக்கவேண்டுமென்றும், தம்முடன் மோதவில் இறங்கவேண்டுமென்றும் சீனர்கள் விரும்புவதற்குச் சாதகமாகப் பல பின்னணிக் காரணங்களைக் கூறலாம்.

(1) கடந்த மூன்றாண்டுகளில் சீனாவின் விவசாய உற்பத்தி படுமோசமாக வீழ்ச்சி அடைந்திருக்கிறது,

(2) இதனால் நாட்டில் கடும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது.

(3) தலைவர் மாஸேதுங்கின் திட்டம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது.

(4) மேலும் ரஷ்யா பொருளாதார, தொழில் நுட்ப உதவிகளை சீனாவுக்களிப்பதை நிறுத்திவிட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் அந்நாட்டின் தொழில் அபிவிருத்தி பாதிக்கப்பட்டிருப்பதுடன், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட சில திட்டங்கள் இடையில் நின்று போய் இருக்கின்றன.

(5) கொள்கை வித்தியாசமும், கம்யூனிஸத் தலைமைப் போட்டியும் சீனா-ரஷ்யா ஆகிய இரு நாடுகளுக்குமிடையே நிலவிவருவதாகச் சொல்லப்படுகிறது.

(6) இதே சமயம் தொழில் அபிவிருத்தியும், விவசாய உற்பத்தியும் இந்தியாவில் சீராக முன்னேற்றமடைந்து வருகின்றன.

இவையெல்லாம் சீனாவுக்கு இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தியிருப்பதுடன், ஆத்திரத்தையும் மூட்டியிருக்கின்றன. எனவே உள்நாட்டு நெருக்கடியை மறைப்பதற்காக மக்களின் மனதை வேறு திசையில் செலுத்திவிடவேண்டியது அத்தியாவசியம். சிறிய நாட்டுடன் எல்லை ஊடுருவல் நடத்தினால் விஷயம் விரைவாக முடிந்துவிடும். சீனாவின் பெரும் ராணுவ பலத்துடன் சிறிய நாடுகள் முன்னிற்க முடியாதாகையால் கெடுபிடி யுத்தத்தை நீடித்தும், நிரந்தரமாகவும் நடத்த முடியாது. பலம் வாய்ந்த இந்தியா போன்ற ஒரு நாட்டுடன் எல்லைப்பிரச்சினையை உண்டாக்கினால்தான் அது தொடர்ந்து நீடிக்கும். இதன் விளைவாக மக்களின் கவனத்தையும் நீண்டகாலத்திற்கு இத்திசையில் திருப்பிவிட்டு உள்நாட்டு பலவீனத்தை அதனால் மறைக்க முடியும்.

எல்லைப் பிரச்சினைக்கு இந்தக் காரணங்களைத்தான் ஊகிக்க வேண்டியிருக்கிறது. மேலும், சீனாவில் இப்போது என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. ரஷ்யாவின் இரும்புத்திரை ஸ்டாலின் காலத்திற்குப்பின் ஓரளவு கிழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சீனாவோ, புதிதாக அங்கு நடக்கும் விஷயங்களைத் திரை போட்டு மறைக்கிறதுபோலும்! இப்போது மக்கள் காங்கிரஸ் அங்கு கூடியிருக்கிறது. அதன் நடவடிக்கைகள உலகத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்தனவாயினும், அதுபற்றி எவ்வித விபரமும் அறிவிக்கப்படவில்லை. பிரதமர் சூ என்-லாய் அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள்பற்றி சபைக்கு எடுத்துரைத்தார் என முன்பு செய்திவந்தது. ஆனால் என்ன நடவடிக்கை என்பதுபற்றியாவது, இதர விபரங்களாவது வெளியாகவில்லை.

சீனர்கள் மொத்தம் 12,000 சதுர மைல் பிரதேசத்தை (இலங்கையின் பாதிப்பரப்பு) ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாய்ச் சொல்லப்படுகிறது. ஆனால் இதுவும் சரியான கணக்கு இல்லை. ஆக்கிரமித்துள்ள பகுதிகள் மனித சஞ்சாரமற்ற மலைப்பாங்கான கானகப் பிரதேசமாய் இருப்பதால் துல்லியமான கணக்கு சொல்ல முடியாதிருப்பதாயும் காரணம் கூறப்படுகிறது. இப்பிரதேசத்தைப் பொறுத்தவரை இந்தியாவுக்கு அதனால் எவ்வித பயனும் இல்லை. ஆயினும் கொள்கை ரீதியில் இது இந்தியப் பிரதேசம் என்பதே முக்கியமானது. வழக்கம்போல் ஆட்சேபக் குறிப்பும், ஆக்கிரமிப்பை உடனடியாகக் காலி செய்யும் படியான கோரிக்கையும் புதுடில்லியிருந்து அனுப்பப்பட்டுள்ளது.

சீனா தன் நடவடிக்கையால் இந்திய மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தத் திட்டமிட்டுச் செயலாற்றிவருகிறது என்றே சொல்லவேண்டும். "இந்திய அரசாங்கத்துக்கெதிராக மக்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும். இந்தியா செயலற்றுச் சும்மா இருக்கிறது என இந்திய மக்கள் ஆத்திரம் கொள்ளவேண்டும்" என்பதே சீனாவின் உத்தேசம்.

சீனா இவ்விதம் நினைக்குமானால் அது பெரும் முட்டாள் தனம் என்றே சொல்லவேண்டும். சீன ஆக்கிரமிப்பு தீவிரமாயிருந்த சமயத்திலும், அதே சமயம் இந்திய அரசாங்கத்தின்மீது உள்நாட்டில் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்ட சமயத்திலும், எல்லைப் பிரச்சினையில் இந்தியா ஒரு பாடம்படிக்குமென சீனா எண்ணிக்கொண்டிருந்தது. ஆனால் 3வது தேர்தல் முடிவு அந்த எண்ணத்தைச் சிதறடித்திருக்கவேண்டும். சீனமீது பலாத்கார நடவடிக்கையை எடுத்துக்கொள்ளாத நேரு அரசாங்கத்தை மீண்டும் இந்திய மக்கள் தெரிவுசெய்தனர். இது சீனாவுக்கு மேலும் ஆத்திரத்தை அளித்திருக்கிறது. நேரு அரசாங்கம் இந்தியாவில் இருக்கும்வரை அரசியல் ரீதியில் சீனாவின் செல்வாக்கு ஆசியாவில் பரவ இடமில்லை. ஏனெனில் நேரு காட்டும் வழி ஆசியா பின்பற்றும் வழியாய் இருப்பதால் கம்யூனிஸ பெருக்கத்துக்கு அது முட்டுக்கட்டையாய் இருக்கிறது. இந்தியாவில் பிரிவினைச் சக்திகள் அதிகமிருப்பதால், நேரு இல்லாத அரசாங்கம் பலவீனமாய் இருக்குமென்றும், அது சீனாவின் போக்குக்கு வசதியாய் இருக்குமென்றும் அவர்கள் கருதியிருக்கலாம். இந்தியாவில் தபால் ஊழியர்கள் வேலைநிறுத்தம் படுதோல்வி அடைந்தது சீனாவுக்கு எவ்வளவு ஆத்திரம் அளித்தது என்பதை அறிவோம்.

எனவே, எவ்வகையிலும் இந்தியாவைப் பலவீனப்படுத்துவது சீனாவுக்கு அனுகூலமாய் இருக்குமெனக் கொள்ளலாம். எல்லைப் பிரச்சினையைச் சிருஷ்டிப்பது இதற்கு ஒரு வழியாகும். போர்மோஸா விஷயத்தில் சீனா கெடுபிடியை உண்டாக்கிப் பார்த்தது. அதனால் பயன் எதுவும் இல்லை. போர்மோஸாவை மீட்கப்போவதாய்க் கூறிவந்ததுடன் மட்டும் நின்று விட்டது. அமெரிக்காவிடம் அதன் வாலாட்டம் செல்லவில்லை. எனவே இந்தியாவுடன் இப்போது முட்டிப்பார்க்கிறது. சீன ஆக்கிரமிப்பைத் தடுக்கும் ராணுவ வலிமை இந்தியாவுக்கு நிச்சயம் உண்டு. இந்தியாவின்பலம் பூகோள ரீதியிலும், ராணுவ ரீதியிலும், மக்களின் ஒற்றுமையிலும் தங்கியிருக்கிறது. மேலும் உலகின் தார்மீக ஆதரவும் இந்தியாவுக்கு உண்டு.

சீனாவுடன் இருவழிகளில் தான் எல்லைப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும். ஒன்று பலாத்காரம்; மற்றொன்று ராஜதந்திர முயற்சிகள். எல்லையில் சிற்சில இடங்களில் இருநாட்டு வீரர்களுக்குமிடையே கைகலப்புகள் நேர்ந்துள்ளபோதிலும் ராஜதந்திரமுயற்சிக்கு இந்தியாவைப் பொறுத்தவரை இன்னும் முடிவு ஏற்படவில்லை. இந்த முடிவுக்குப்பின்பே அவசியமானபோது, ராணுவ நடவடிக்கை அல்லது வேறு நடவடிக்கை எடுத்துக்கொள்வது இந்தியாவின் உத்தேசம் என்பது பிரதமரின் அறிக்கைகளிலிருந்து தெளிவாகிறது.

## யுத்தம் தந்த நன்மை

"பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் கலைத்துவிடுவதற்காக நான் பிரதமராய் வரவில்லை" என இந்திய சுதந்திரப்போராட்டம் உச்ச கட்டத்தில் இருந்த போது திரு. சர்ச்சில் கூறினார். ஆனால் அவருக்குப்பின்வந்த பிரிட்டிஷ் பிரதமர்கள் அவ்வரும் சாம்ராஜ்யத்தைக் கலைத்துக்கொண்டே வருகிறார்கள். திரு. அட்லியின் காலத்திலிருந்து, திரு. மாக்மில்லன் காலம்வரை ஒரு டஜனுக்கு மேற்பட்ட அடிமை நாடுகளை பிரிட்டன் விடுதலைசெய்திருக்கிறது. தொழிற்கட்சி அரசாங்கம் மட்டுமின்றி சர்ச்சிலின் கன்சர்வேடிவ் அரசாங்கம்கூட சாம்ராஜ்யக் கலைப்பில் ஈடுபட்டிருப்பது விந்தையான காலமாறுதலாகும்.

15 வருடங்களுக்கு முன்பு வரை லண்டன் நகரம் ஏகாதிபத்தியத்தின் இரும்புக்கோட்டையாக விளங்கி வந்தது. ஆனால் என்ன மாற்றம்! இன்று லண்டன் நகரில் புதிய பல பிரிட்டிஷ் குடியேற்றநாடுகளுக்குச் சுதந்திரம் வழங்குவதற்கான மகாநாடுகள் சங்கிலித் தொடர்போல் நடந்துவருவதைப் பார்க்கிறோம்! ஆசியாவில் அதன் அலுவல்கள் அநேகமாக முடிந்து விட்டன. ஆபிரிக்காவில் பலநாடுகளின் சுதந்திரம் சம்பந்தமான மகாநாடுகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. இன்னும் பல நடக்கவிருக்கின்றன.

யுத்தத்தினால் ஏற்படும் அழிவுபற்றியும், அதன் தீமை பற்றியும் எங்கும் பேசப்படுகிறது. இது முற்றும் உண்மை. ஆனால் உலகில் ஒரேயொரு யுத்தம் மட்டும் தீமையுடன் நன்மையையும் செய்துவிட்டுப் போய் இருக்கிறது. ஹிட்லர் ஆரம்பித்த இரண்டாவது மகாயுத்தத்திற்குப் பின் உலகின் சிந்தனைப்போக்கில் ஏற்பட்ட மாற்றத்தை, ஒரு முன்னேற்றம் அல்லது வளர்ச்சி எனக் கொள்ளலாம். 2-ம் யுத்தத்திற்குப் பின்பு தான் சர்வவல்லமையுள்ள ஏகாதிபத்திய சிந்தனையில் மாறுதல்கள் ஏற்பட்டன. மனிதனை மனிதன் கட்டியாள்வது நிரந்தரமானதல்ல என்ற தத்துவம் யுத்தமுடிவில்தான் பிறந்தது. யுத்தத்திற்குப்பின்பு ஐ நா. உருவாயிற்று. மனித உரிமை சாஸனமும், சுதந்திர தத்துவங்களும் அப்போது முதல் வளர்ச்சிபெற்றுவருகின்றன. பேராசையினால் யுத்தம் ஏற்பட்டது. ஆனால் பெரிய யுத்தங்கள் பேராசைக்காரர்களையே அழித்துவிட்டன. நசுக்குதலினால் போராட்டம் ஏற்பட்டது. நசுக்கப்படுபவர்களிடமிருந்து இது போராட்டத்தைக் கிளப்பியது. இதனாலும் படிப்படியான அழிவே ஏற்பட்டது. எனவே யுத்தங்களைத் தவிர்க்க வேண்டுமானால் சகல நாடுகளும் சுதந்திரமாக, சம அந்தஸ்துடன் விளங்கவேண்டும் என்ற உண்மையை இரண்டாவது யுத்தம் போதித்துவிட்டது. இந்தக் கோணத்திலிருந்து பார்த்தால் ஹிட்லரை யுத்தவெறியன் என்பதைவிட பெரும் சீர்திருத்தவாதி என்றே கொள்ள முடியும். கோடிக் கணக்கானவர்களைக் கொன்றபின்பே சுதந்திரமும், சமத்துவமும், சகோதரத்துவமும் பிறந்திருக்கின்றன.

## ராதாகிருஷ்ணன்

இந்தியக் குடியரசின் 2-வது ஜனாதிபதியாக டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அடுத்தமாதம் பதவி ஏற்கிறார். பலர் பதவியினால் பெருமையடைகிறார்கள். ஆனால் சிலரினால் பதவி பெருமையடைகிறது. டாக்டர் ராதாகிருஷ்ணனைப் பொறுத்தவரை இந்திய ஜனாதிபதி பதவி அவரால் பெருமை பெறும் எனக் கூறலாம்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் ஏழையாகப் பிறந்த ஒரு தென்னிந்தியர். ஆனால் அவரது அறிவுப் பொக்கிஷத்தை உலகமே இன்று கொண்டாடுகிறது. அவர் வகித்த பதவிகள் அவரால் பெருமையடைந்தன. ரஷ்யாவில் அவர் ஸ்தானிகர் பதவிவகித்தசமயத்திலும், இந்தியாவில் உப ஜனாதிபதியாக இருக்கும் சமயத்திலும், ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராய் விளங்கிய சமயத்திலும் அப்பதவிகளுக்கு அவர் தனிச்சோபை அளித்தார். இன்று உலகில் உயிர் வாழும் தத்துவஞானிகளில் அவரைத் தலைசிறந்தவராகக் கொள்ளலாம் அவருக்குக் கிடைத்த டாக்டர் பட்டங்கள் கணக்கிலடங்காதவை. குறைந்தது மூன்றுடஜன் தடவைகள் அவர் கௌரவ டாக்டர் பட்டங்களைப் பெற்றிருக்கிறார். அநேகமாக உலகிலுள்ள எல்லா முக்கிய பல்கலைக்கழகங்களும் அவருக்கு இந்த கௌரவத்தை அளித்துள்ளன. கீழ்நாட்டு - மேல்நாட்டு தத்துவங்களை அவர் விளக்க ஆரம்பித்தால் அறிஞர்களுக்கு மட்டுமே அது விளங்கும். ஆனால் சாதாரண மக்களும் அவரது பேச்சை ரசிக்கலாம். கணீரென்ற குரலில், அழகான ஆங்கில இலக்கியத்தில், முத்துச் சரம் போல அடுக்கடுக்காக அவர் பேசுவார். வேதங்களும், உபநிஷத்துக்களும், பைபிளும், குர்ஆனும், பௌத்த சாஸ்திரங்களும், சமஸ்கிருதமும், பாளியும் எங்கிருந்து தான் வருமோ தெரியாது! ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் 16 வருடங்கள் தத்துவப் பேராசிரியராய் இருந்தார். எந்த அறிஞரையும் நையாண்டி செய்யும் ஒக்ஸ்போர்ட் மாணவர்கள் ராதாகிருஷ்ணன் பேச ஆரம்பித்ததும் திறந்த வாய் மூடாமல் கவனித்துக் கொண்டே இருப்பார்களாம். டாக்டர் ராதா கிருஷ்ணனின் பேச்சு என்றால் பிரதமர் நேரு கூட அதைக் கேட்டு இன்புற வருவதுண்டு. உலகின் சிறந்த பேச்சாளர்களில் அவரையும் ஒருவராகக் கணிக்கிறார்கள். லண்டனில் அவருக்கும், பெர்ட்ரண்ட் ரஸ்ஸலுக்குமிடையே நடைபெறும் விவாதங்களை பி. பி. ஸி. நிலையம் அடிக்கடி ஒலிபரப்புவதுண்டு. கிழக்குக்கும் மேற்குக்குமிடையே சிந்தனைப் பாலமாக விளங்குகிறார் டாக்டர் ராதாகிருஷ்ணன். இரு கலாச்சாரங்களையும் நாகரிகங்களையும் ஒன்று படுத்தும் தூதராக அவர் விளங்குகிறார். பேரறிஞரும், மேதையும், கல்விமானுமாகிய டாக்டர் ராதாகிருஷ்ணன் ஜனாதிபதியாக வருவதை விட அப்பதவிக்கு வேறென்ன பெருமை வேண்டும்?

## பூஜ்யம் தபால்

ஜனாப் பதியுதீன் மாமூத்
கல்வி மந்திரி,
கொழும்பு.

அமைச்சரே!

தாங்கள் ஜப்பான், மலாயா முதலிய நாடுகளுக்குச் சென்று திரும்பியபின் வெளியிட்டுள்ள அறிக்கையைப் பார்த்தேன். நம்பவேமுடியவில்லை.

"வகுப்புவாதம் மிக மோசமானது. சிறுபான்மையினரின் வகுப்புவாதம் நான் புரிந்து கொள்ளக் கூடியது. ஆனால் பெரும்பான்மைச் சமூக வகுப்புவாதமோ —அட ஆண்டவனே— நீ தான் காப்பாற்ற வேண்டும்!" என்று கூறியிருக்கிறீர்கள். பஹுத் அச்சா!

"மொழி, மதம், கலாச்சாரம் இதுபோன்றவற்றில் நாம் அதிகம் கவனம் செலுத்துகிறோம். அவை அவசியம் தான். ஆனால் முக்கிய விஷயங்களை முதலில் கவனிக்கவேண்டும். அப்படிச் செய்யாததால் தான் நாம் பின் தங்கியுள்ளோம். மலாயா முதலிய நாடுகள், நமக்குப்பின் சுதந்திரம் பெற்று பெரிதும் முன்னேறிவிட்டன!" என்று சொன்ன வாய்க்கு, ஒரு டன் சீனி சர்க்கரை போடவேண்டும்.

ஆனால் இப்படி துணிச்சலுடன் கூறிய பின் தாங்கள் நீடித்து அமைச்சராக இருக்க முடியுமா? என்ற சந்தேகமேற்படுகிறது. ஆண்டவன் சித்தம் எப்படியோ!

இப்படிக்கு
பூஜ்யம்.

குறிப்பு:- மலாயா சென்றபின் தங்களுக்கு இந்தஞானோதயம் பிறந்துள்ளதைக்கண்டதும், மற்றும் பல எம். பி. க்களையும், மந்திரிகளையும் அங்கு உடன் அனுப்பி வைப்பது நலமென்றுதோன்றுகிறது. சரிதானே.

பூவன்னா

* * *

மாட்சிமை தங்கிய
நேபாள மன்னர் மகேந்திரா
C/o. நேருஜி,
புதுடில்லி.

ராஜாதிராஜ, ராஜ மார்த்தாண்ட ராஜகம்பீரா!

பல புதிய நண்பர்கள் தங்களுக்கு ஏற்பட்டும், தாங்கள் நேருஜியின் அழைப்பை ஏற்று, இமயமலையிலிருந்து இறங்கி புதுடில்லிக்கு வந்ததைக் கேட்க மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

உலகிலே ஒரே ஒரு இந்து ராஜ்யமான நேபாளத்தில் அரசியல் அமைதியின்றி கலவரங்கள் நடப்பதை அறிய மிகவும் வருத்தம். மேலும் இந்தியாவுடனும், நேருஜியுடனும் மனஸ்தாபம் கொண்டு, தாங்கள் வெளியிடும் அறிக்கைகளைக் காண அதைவிட வருத்தம்.

உலகிலே எவ்வளவோ முடி மன்னர்கள் இருந்தனர். அவர்கள் இருக்குமிடம் தெரியவில்லை. முடி ஆட்சி மறைந்து குடி ஆட்சி ஏற்பட்டு வருவதைத் தாங்கள் அறிவீர்கள். மன்னிக்கவேண்டும். தாங்கள் உள்நாட்டு விஷயங்களில் தலையிடப்படாதென்று பஞ்சசீல உத்தரவு போட்டுள்ளத்தை மறந்துவிட்டேன்.

இளம் மன்னரான தாங்களும் தங்கள் ராஜ்யமும் நீடுழி சுபீட்சமாக அமைதியாக வாழ, ஆண்டவனே தங்களுக்கு நல்ல புத்தி கொடுக்கவேண்டும்.

இப்படிக்கு
பூஜ்யம்.

குறிப்பு:- தங்கள் சௌக்கியத்தை இங்குள்ள மான் குட்டிகள் விசாரிப்பதுடன், தாங்கள் எப்போது இங்கு திரும்பி வரப் போகிறீர்கள் என்று கவலையுடன் கேட்கின்றன.

பூவன்னா

# கலை அரங்கம்

## நியுயோர்க்கில் சிவாஜி பிரட்ரிக்மார்ச் சந்திப்பு

### பத்மினிபற்றி ஆங்கில நடிகர் விசாரித்தார்



அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நியுயோர்க் நகரில் பிரபல ஆங்கில நடிகை பிரட்ரிக்மார்ச்சைச் சந்தித்தார். இருவரும் பல விஷயங்கள் குறித்துப் பேசினர்.

சில வருடங்களுக்குமுன் இந்தியாவுக்கு வந்திருந்த நடிகர் பிரட்ரிச்மார்ச், சிவாஜியிடம் "பத்மினி சுகமாக இருக்கிறாரா?" என்று கேட்டுவிட்டு, "பத்மினி திருமணம் செய்து கொண்டதை அறிந்ததும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்" என்று கூறினர்.

"பத்மினிக்கு இப்போது ஆண்குழந்தை பிறந்திருக்கிறது. அவர் கணவரோடும் குழந்தையோடும் மகிழ்ச்சியுடன் குடும்பம் நடத்துகிறார்" என்று சிவாஜிகணேசன் பதிலளித்தார்.

"ஓ, அப்படியா? மிகவும் மகிழ்ச்சி" என்று பிரட்ரிக்மார்ச் சொன்னர்.

அறிஞர் பெர்னர்ட்ஷா எழுதிய ஒரு நாடகம் நியூயோர்க்கில் ஏழு வருடங்களாக தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இந்த நாடகத்தை சிவாஜிகணேசன் பார்த்தார்.

நியுயோர்க் நகரில் மற்றும் பிரபல நடிக நடிகைகளை சிவாஜி சந்தித்துப் பேசினர்.

## ஸ்ரீதர் டைரக்ஷனில் மனேகர் பிக்சர்ஸ் தயாரிப்பு

திரைக் கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை ஸ்ரீதர் ஏற்றுள்ள சமூகப் படமொன்றை மனேகர் பிக்சாசார் தங்களது அடுத்த தயாரிப்பாக ஏப்ரல் 9-ம் தேதி நெப்டியூன் ஸ்டூடியோவில் துவக்கினர். 'நெஞ்சில் ஓர் ஆலயம்' புகழ் பேபி பத்மினி காமிராவை முடுக்கினள்.

வின்சென்ட் ஒளிப்பதிவு செய்யும் இப்படத்திற்கு கண்ணதாசன் பாடல்கள் எழுத, விஸ்வநாதன் — ராமமூர்த்தி இசையமைக்கின்றனர்.

## தூங்காத தேவி!

தமிழ்ப்பட உலகில் பெரிய நட்சத்திரமாகத் திகழும் சரோஜாதேவிக்கு 'பிளேன்' என்றால் பயம்! இருந்தாலும் பிளேனில் செல்லாமல் இருக்க முடியுமா? பம்பாய்க்கும் சென்னைக்கும் அடிக்கடி பறக்க வேண்டியவராயிற்றே அவர் ஆகலால் பிளேனில செல்லும் போது, பகலானாலும் சரி, இரவானாலும் சரி, எத்தனை மணி நேர பயணமானாலும் சரி தூங்காமல் விழித்திருப்பார். இதற்கு நேர் எதிரிடை அவரது தாயார்! பிளேன் பறக்க ஆரம்பித்ததும் தூக்கம் வந்துவிடுமாம்.

மதன் தியேட்டர்ஸ் "தாய் வீடு" படப்பிடிப்பின் இடைவேளையில் சரோஜாதேவியும், சந்திரபாபுவும் தாங்கள் பிரயாண அனுபவங்களைப் பற்றி சுவாரஸ்யமாக பேசிக்கொண்டிருந்தனர். அப்போது தான் இந்த தகவல் வெளிவந்தது.

## கொத்தமங்கலம் சுப்பு எழுதும் கதை

"புதையல்", "தெய்வப் பிறவி" முதலிய படங்களைத் தயாரித்த கமால் பிரதர்சார் சிலகால ஓய்விற்குப்பிறகு மீண்டும் படப்பிடிப்பில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளனர்.

கொத்தமங்கலம் சுப்பு எழுதிய ஒரு சமுகப்படத்தை அவர்கள் திரைப்படமாக்கப் போகின்றனர். இக்கதை இது வரையில் எந்தப் பத்திரிகையிலும் வெளிவந்ததல்ல என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப் படத்தில் கதாநாயகியாக நடிக்க சரோஜாதேவி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். ஜெமினிகணேசன் கதாநாயகனை நடிக்க ஒப்பந்தம் செய்யப்படக்கூடும்.

கிருஷ்ணன் - பஞ்சு டைரக்ட் செய்வார்கள்.



குமாரி அம்பிகை நடராஜாவின் பரதநாட்டியம் மே மாதம் 4-ம் திகதி யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தின் உதவி நிதிக்காக நடைபெறவிருக்கும் குமாரி அம்பிகையின் பாரத நாட்டியக் கச்சேரிக்கு அடையாறு கலாக்ஷேத்திர இசை விற்பன்னர்கள் பக்கவாத்தியம் வாசிப்பார்கள்.

தமது ஐந்தாவது வயதிலேயே அடையாறு கலாக்ஷேத்திரத்தில் சேர்ந்து பரத நாட்டியம் கற்க ஆரம்பித்த குமாரி அம்பிகை நடராஜாவுக்கு இப்பொழுது வயது 18. இந்தியாவின் பல பாகங்களிலும் கலாக்ஷேத்திரம் அளித்த பல நடன, இசை நிகழ்ச்சிகளில் இவர் பங்குபற்றியிருக்கிறார்.

## கல்யாண் குமார் இல்லாத படம் இல்லை!

இப்போது கல்யாண் குமாரை "ஆயிரம் முகம் கல்யாண் குமார்" என்று அழைக்கலாம்! ஏனெனில் இப்போது அறிவிக்கப்படும் பல படங்களில் எப்படி எம். ஆர். ராதா கண்ணதாசன் பெயர்கள் இல்லாமல் இருக்காதோ அதே போல்தான் கல்யாண் குமாரும் தினம் அவர் நடிக்கும் படம் ஏதாவது ஒன்று அறிவிக்கப்பட்டு வருகின்றது. தமிழ், கன்னடம் என்ற இரண்டு மார்க்கெட்டுகளையும் கெட்டியாகப் பிடித்துவிட்ட அவர், பல படங்களில் பலவித மான பாகங்களில் நடித்து வருகிறார்.

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ் "மணியோசை" படத்தில் கூனனாக நடிக்கும் அவர், ஜி. வி. அய்யர் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான "எங்கிருந்தோ வந்தான்" படத்தில் குருபியாக காட்சிதருகிறார்.

விக்ரம் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான 'தென்றல் வீசும்' படத்தில் குருடனாக நடிக்க வேண்டிய அவர், ராகவன் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் பணக்கார வீட்டு வாலிபனாக வருகிறார்.

ஆர். ஆர். பிக்சர்ஸ் தயாரிப்பில் ரகு என்னும் அரசாங்க அதிகாரியாக வரும் அவர், புதிதாக பி. வி. என். புரொடக்ஷன்ஸ் மூன்ருவது தயாரிப்பு, மஹேஹர் பிக்சர்ஸ் தயாரிப்பு, பரமு பிலிம்ஸின் "சீமான் பெற்ற செல்வங்கள்" ஆகிய படங்களில் பலவேடங்களில் நடித்துவருகிறார்.

## "பொன்னென்பேன் பூ என்பேன்"

### "பொலிஸ்காரன் மகளி"ல் கண்ணதாசன் பாட்டு

"பொன்னென்பேன், பூ என்பேன், கண் என்பேன், வேறு என்னென்பேன்" என்ற முதல் அடிகளைக் கொண்ட கானடா ராகத்தில் அமைந்த கர்னடக இசைப்பாட்டொன்று மெஜெஸ்டிக் ஸ்டுடியோவில் பதிவு செய்யப்பட்டது.

இப்பாட்டு சித்ரகலா என்னும் படக் கம்பெனியாரின் "பொலிஸ்காரன் மகள்" படத்திற்காக பதிவுசெய்யப்பட்டது. இப்படத்திற்காக முதலாவதாக பதிவு செய்யும் பாட்டு இது.

இப்பாட்டை கண்ணதாசன் எழுத, விஸ்வநாதன் — ராமமூர்த்தி இசையமைக்க, பி. பி. சீனிவாசன் ஜானகி குரல் கொடுத்துள்ளனர்.

இப் பாட்டை படத்தில் பாலாஜி, விஜயகுமாரி பாடுவது போல் படமாக்கப்படும். மிகக்குறைந்த பக்கவாத்தியங்களுடன் ஒலிப்பதிவுசெய்யப்பட்டுள்ள இப்பாட்டு, கர்னடக சங்கீதத்தை விரும்பும் ரசிகர்களின் உள்ளத்தை அப்படியே கொள்ளை கொள்ளுமாம்.

சேவாஸ்டேஜ் வெற்றி நாடகமான "பொலிஸ்காரன் மகளி"ன் மூலக்கதையை பி. எஸ். ராமையா எழுதியுள்ளார்.

மற்றும் எஸ். வி. சகஸ்திரநாமம், சந்திரபாபு, முத்துராமன் நடிக்கும் இப்படத்தின் திரைக்கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புகளை ஸ்ரீதர் எற்றுள்ளார்.

நாடகம்

## ராஜராஜ சோழன்

விமரிசனம்

"இராஜ ராஜ சோழன் எவ்வளவு பெரிய நடிகன் என்பதை நேரில் பார்த்துவிட்டீரல்லவா நாடகாசிரியரே, இனி நீர் என் நாடகத்தை எழுதலாம். அந்த நாடகத்தை நம் தஞ்சைப் பெரிய கோவிலிலே ஒவ்வொரு வைகாசிப் பெருவிழாவிலும் நடிக்க ஏற்பாடு செய்கிறேன். அந்த நாடகம் ஆடுபவருக்கு ஆண்டுதோறும் நூற்றிருபதின் கல நெல் நிபந்தம் ஏற்படுத்தப்படும். இவ்வளவும் என் புகழைப் பரப்புவதற்காக அல்ல! என் கொள்கைகளோடு நாடகக்கலை வளர்வதற்காக."

இவ்வாறு அன்றைய நாடகாசிரியனுக்குப் பணித்தான் ராஜராஜ சக்கரவர்த்தி. நாடகக் கலைக்காகத் தனது வாழ்க்கையையே நாடகமாக்கிவிட்ட மன்னனின் வாழ்க்கை நாடகத்தை இன்றைய மொழிவழக்கில் வகுத்துத் தந்துள்ளார், திரு. அரு. இராமநாதன்.

வருஷப்பிறப்புத்தினத்தன்று அரியாலை மக்கள் கொண்டாடிய 33-வது சுதேசிய திருநாள் விழாவில் அரியாலை ஐக்கிய நாடக மன்றத்தினர் இந்த உயரிய நாடகத்தை வெகு சிறப்பாக நடித்துக் காண்பித்தனர்.

ராஜராஜன் பாகத்தை ஏற்று நடித்தவர் அசல் ராஜராஜனுகவே மாறிவிட்டார். நடிப்பைப்பொறுத்த வரையும் பேச்சைப் பொறுத்தவரையும் அரசனின் அதிகார பாவனையைப் பிரதிபலித்துக்காட்டினர். தோற்றமளவில் ராஜராஜனின் கலாரசிகத்தன்மையே இவரிடம் அதிகம் சோபித்திருந்தது. வசனங்களை விருப்புடன் பேசிய சமயங்களில்கூட அவை தெளிவாக இருந்தன. பல இடங்களில் இவரது நடிப்பு உச்சநிலை யடைத்திருந்ததெனினும், அரசசபையில் புலவர்கள் புகழ் பாடியபோது அவற்றைக் கிரகித்து உணர்ந்ததாகத் தலையசைத்து உணர்ந்த கட்டம் வெகு இயற்கையாக அமைந்திருந்தது. ராஜராஜன் பாகத்தை ஏற்று நடித்த திரு. ஈ. கே. குமரையா நல்ல நடிகன் மட்டுமன்றி நல்ல ரசிகனும் கூட என்பதை நிரூபித்துவிட்டார்.

விமலாதித்தன் பாகத்தை ஏற்று நடித்தவர் உணர்ந்து நடித்தார். வீரன் பாகத்துக்கு ஏற்ற தோற்றமுடைய இவரின் உடையலங்காரம் மிகப் பொருத்தமாக இருந்தது. ஒரு சில இடங்களில் வசனங்களை மென்றுவிட்டார். எனினும் தமது பாகத்துக்கு ஏற்ப நன்ருக நடித்தார். நடிப்பு நன்கு சோபித்திருந்தது. ஒப்பனை இவருக்கு அதிகம் உதவவில்லை. கண்களின் வெள்ளைப் பூச்சு மிகுந்து கண்களையே மறைத்துவிட்டன! புலிக்கூண்டில் நின்று பேசியபோதும் மன்னனிடம் மகளைப் பரிசாகத் தரும்படி கேட்டபோதும் இவரது நடிப்பு கச்சிதம்! இப் பாகத்தை எற்று நடித்தவர் திரு. ஐ. எஸ். சண்முகநாதன்.

வில்லன் பாகத்தை ஏற்று நடித்தவர் செல்வன் கிருஷ்ணசிங்கம். வெகு கஷ்டமான ஒரு பாகத்தை இவர் வெற்றியாக நடித்தார். குள்ளப் பார்வையும் கள்ளப் புன்சிரிப்பும் முகத்தில் தவழ அசல் பாலதேவராகவே தோற்றினர். விமலாதித்தனைப் புலிக்கூண்டில் அடையுங்கள் என்று ராஜராஜன் உத்தரவிட்டபோது பாலதேவர் அடைந்த மகிழ்ச்சியையும், "உதட்டில் நட்பும் உள்ளத்தில் பகையும் உள்ள இவர் உறவாடியே நம்மைக் கெடுக்க முயன்றவர்" என்று ராஜராஜன் வெளியாகத் தூற்றியபோது பாலதேவர் பட்ட மன அவஸ்தையையும் முகபாவனையால் நன்கு நடித்துக்காட்டினர்' செல்வன் கிருஷ்ணசிங்கம். இவருக்கு நல்ல எதிர்காலமுண்டு. உடையலங்காரம், ஒப்பனை எல்லாம் இவருக்கு வெகு பொருத்தம்!

குறித்த பாகத்தை செல்வன் என்.சண்முகராஜா ஏற்று நடித்தார். நடிப்புவெகு ஜோராயிருந்தது. குரல்கூட உதவி புரிந்தது. ஆனல் தோற்றந்தான்....! பாவம்!

அத்தை, வீரமாதேவி பாகங்களையும் ஆண்கள்தான் ஏற்று நடித்தார்கள். இவர்களின் தோற்றம் பரவாயில்லை. அத்தையின் ஆடையலங்காரம் நடிப்பு எல்லாம் நன்ருயிருந்தன.

ராஜேந்திரன் பாகத்தை ஏற்று நடித்த செல்வன் எம். சீவரத்தினம் நல்ல சகோதரனுக நடித்தார். தோற்றம், அலங்காரம், நடிப்பு எல்லாம் எடுப்பாக இருந்தன.

மொத்தத்தில் அரியாலை ஐக்கிய நாடக மன்றத்தின் முயற்சி வெற்றிபெற்றுவிட்டது. மேடையமைப்பு, ஒளி எல்லாம் பொருத்தமாக இருந்தன. இசைக்கு இன்னும் சிறிது கவனம் செலுத்தியிருக்கலாம். குந்தவியின் நாட்டியம் நாடகத்தில் ஒரு முக்கிய கட்டம். அதைச் செவ்வையாக நடாத்த வசதிக்குறையிருந்தது போலும்! குந்தவி பாகத்தை ஏற்றவருக்கும், நாட்டியமாடிய பெண்ணுக்குமுள்ள முக வித்தியாசம் புலப்படாதிருக்க திரைநிழல் யுக்தியை மேற்கொண்டனர்.

நல்ல நடிகர்கள் மறைவிலிருக்கவேண்டியதில்லை. அரியாலை ஐக்கிய நாடகமன்றத்தினா தமது கலை ஆர்வத்தை ஏனையோருடனும் பகிர்ந்துகொள்ளலாம். நாடகமன்றத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

— கே. எஸ்.

## காபூலி வாலா

பிமல்ராய் தயாரித்த திரைப்படமான "காபூலிவாலா" சுவிட்சர்லாந்தில் நடைபெறவிருக்கும் சர்வதேசத் திரைப்பட விழாவில் திரையிடப்படுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

# மகளிர் மன்றம்

## பெண்கள்

# படித்தால் மட்டும் போதுமா?

## பயனும் புகழும் பெற வாழவேண்டாமா?

— 'சசி' —

இரவு பகலாகச் சமையலறையிலேயே காலத்தைப் போக்கிவிட்டு வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் பெண்களின் தொகை, தமிழ்நாட்டில்தான் அதிகமாம். இன்று சிறிதளவு இந்த நிலை மாறி வருகின்றதெனினும் நாட்டின் பொருள் வருவாயை அதிகரிப்பதற்குத் தமிழ்ப் பெண்கள் வெகு சொற்பமாகவே உதவுகின்றார்கள். மேல்நாட்டுப் பெண்களைப்போலக் கைத்தொழில் கமத்தொழில்களில் பெருந்தொகையான தமிழ்ப் பெண்கள் ஈடுபடுவதில்லை. அடுக்களையே தஞ்சமெனத் தமிழ்ப் பெண்கள் கருதிவந்த நிலை ஓரளவு மாறிவருகின்றது. இந்த நிலையை மாற்றி வரும் பெண்களும் உத்தியோகத் துறையில் ஈடுபட்டுப் பண வருவாயைப் பெருக்குவதையே குறிக்கோளாகக் கொள்கிறார்கள். உத்தியோகத்தில் மட்டுமன்றிக் கைத்தொழில் கமத்தொழில்களிலும் பெண்கள் ஈடுபட வேண்டும்.

தமிழ் பெண்களிடையே இன்று ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறதெனலாம். எந்தத் துறையிலும் ஒரு சில பெண்களேனும் இறங்கியிருப்பதைக் காண்கிறோம். சகல துறைகளிலும் இறங்கினால் மட்டும் போதாது. உலகப் புகழ் பெறுமளவிற்கு உழைக்கக் கூடிய பெண்கள் ஒரு சிலர் தமிழ் மக்களிடையே இருக்கிறார்களெனினும், அந்தப் புகழை எட்டிப்பிடிக்க அவர்கள் முயல்வதில்லை. முன்வருவதில்லை. மேலைநாட்டுப் பெண்கள் போன்று தமிழ்ப் பெண்கள் இன்னும் தைரியம் கொள்ளவில்லை.

அரசியல் துறை, சமூக சேவைகளிலும் பெண்கள் தாராளமாக உழைக்கலாம். நல்ல மனைவியாகவும் நல்ல தாயாகவும் உழைக்கும் பெண்களிடையே நல்ல மந்திரிகளாக உழைக்கக்கூடிய திறனும் இருக்கத்தான் செய்கிறது. இந்தியப் பெண்மணிகள் ஒரு சிலர் இதை நிரூபித்துக் காட்டிவிட்டார்கள். இந்திரா காந்தி, பண்டிட் விஜயலக்ஷ்மி, லக்ஷ்மி மேனன் ஆகியோர் உலக அரசியல் மேடையிலேயே பாண்டித்தியம் பெற்றவர்கள். இவர்களைப் போன்று தமிழ்ப் பெண்கள் பலர் அரசியலில் பங்கு பற்றலாம் என்று நம்புவதற்கு இடமுண்டு. தமிழ் சமுதாயத்தில் ஆண்களைப் போன்று பெண்களும் ஒன்றாகக் கல்வி கற்கிறார்கள். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பயின்று பட்டம் பெறும் பெண்கள் மேலும் பாண்டித்தியம் பெற நினைப்பதில்லை. பிற்கால வாழ்க்கையில் தமது கல்வி அறிவைப் பிரயோசனப் படுத்துவதில்லை. தேசபக்தியும் மக்கள் அபிமானமும் கொண்ட பெண்கள் அரசியலில் தாராளமாக ஈடுபடலாம் என சமீபத்தில் நடைபெற்ற இந்திய பொதுத் தேர்தலில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திருமதி. பார்வதி அருச்சுனன் அரசியலில் பெண்களின் பங்கு பற்றிக் கூறியுள்ளதை அவதானிப்போம்'

"அண்மையில் அமெரிக்கா முதலிய மேல் நாடுகளுக்குச் சென்றபோது, அந்நாட்டுப் பெண்கள் பெருமளவில் பல துறைகளிலும் செயலாற்றுவதைக் கண்டு பொறாமைப் பட்டேன். அதுவும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தேசபக்தி மிகுந்தவர்களாக இருக்கக் கண்டேன். விலைமதிப்பில்லாத சுதந்திரத்தைப் பதினன்கு ஆண்டுகளுக்கு முன்பே நமக்கு வாங்கி அளித்த அண்ணல் காந்தியடிகள், நமது பெண்களைப் பற்றிக் கண்ட கனவு இன்று வரை நிறைவேற்றப் படாமல் இருக்கக் காரணம் யாது? நமது நாட்டில் கல்வி அறிவு நிரம்பிய, வசதி மிகுந்த குடும்பத்தில் பிறந்த பெண்மணிகள் பலர் இருந்தும், அவர்களெல்லோரும் நாட்டுத் தொண்டில் ஈடுபட இன்னும் முன்வராத காரணம் என்னவோ? தங்கள் செல்வத்தையும் அறிவுத்திறனையும் ஓய்வு நேரங்களில் நாட்டின் சேவைக்கெனப் பயன் படுத்தாமல் தங்கள் வாழ்நாளை வீணக்குவது நல்லதல்ல. இந்த நிலைமை மாறி நாட்டின் புகழ் ஓங்கச் சகோதரிகள் முன்வர வேண்டும். ஔவை மூதாட்டியைப் பெற்றெடுத்த பொன்னாட்டில், வீரமும், தேச பக்தியும் நிறைந்த வனிதாமணிகள் பலர் உளர் என்பதே என் அசையா நம்பிக்கை.

அரசியல் அரங்கில் பெண்களுக்கும் பங்குண்டு என்பதை நமது நாட்டின் சரித்திர வாயிலாக அறியலாம். தேச பக்தி மிகுந்து வீரச்செயல்கள் புரிந்துள்ள ஜான்சிராணி, ராணி மங்கம்மாள் ஆகியோரைப் பற்றி அறியாதவர்கள் இல்லையல்லவா"

### சமையற் பெண்கள் ? . . .

"தமிழ்நாட்டுப்பெண்களுக்கு முக்காடு முகமூடி என்னும் மூடவழக்கங்கள் இல்லை. ஆண்களின் முகத்தைப் பார்த்தால் தகாத செயல் என்னும் கொடுமையும் இல்லை. ஆயினும் தமிழ் நாட்டில் பெண்மை போதிய உரிமை வாழ்வு பெறவில்லை என்றேசுறவேண்டும் ..... இன்று ஒரு சில நகரங்களில் அங்கும் இங்குமாகப் பெண்கள் சிலர் உரிமையும் சிறப்பும் பெற்று விளங்குகிறார்கள். இது உண்மையே' இதைக் கண்டு மனநிறைவு கொள்வதில் பயனில்லை ..... உலகம் அறியமுடியாமல், இரவும் பகலும் சமையல் அறையிலும் தொழிற்சாலையிலும் வயல்களிலும் உழைத்து அலுத்து ஓய்ந்து மடியும் பெண்களே **பெரும்பான்மையான தமிழ்ப் பெண்கள்** என்பதை மறந்து விடக் கூடாது."

—டாக்டர் மு. வரதராஜன்.

# ஊறுகாய் வகைகள் [1]

## அவற்றைத் தயாரிக்கும் முறைகள்

எலுமிச்சை, நெல்லி முதலியவை அதிகமாகக் காய்த்து விட்டால் அவற்றை விற்றுத் தீர்ப்பது எமக்குப் பெரிய தொல்லையாகிவிடும். நன்றாகக் காய்த்த காலங்களில் அவைக்குக் கிராக்கி குறைந்துபோகும். விலையும் அதிகம் இருக்காது. மலிவான விலைக்கு விற்றுவிடுவதைவிட அவற்றை ஊறுகாய் போட்டுப் பாதுகாத்தால் காலமல்லாத காலங்களில் உபயோகிக்கவும், நல்ல விலைக்கு விற்பதற்கும் அவை உதவும். ஊறுகாய் மிகவும் உபயோகமான பொருள். வீட்டில் ஊறுகாய் இருப்பது ஒரு செல்வங்கூட. சரோஜினி சங்கர் கூறியுள்ள மூன்று வகையான ஊறுகாய்கள் செய்யும் முறைகளை இங்கு தருகிறோம்.

### 1 எலுமிச்சை ஊறுகாய்

தேவையான பொருள்கள்:

| | |
|---|---|
| மிளகாய்ப் பொடி | 1 பலம் |
| நல்லெண்ணெய் | $1\frac{1}{2}$ பலம் |
| உப்பு | $\frac{1}{4}$ ஆழாக்கு |
| கடுகு, பெருங்காயம் | சிறிதளவு |
| எலுமிச்சம்பழம் | 6 |

**செய்முறை:** எலுமிச்சம்பழங்களைச் சுத்தமாகக் கழுவிக்கொண்டு துண்டங்களாக நறுக்கி எடுத்துக்கொள்ளவும். இத்துடன் உப்பைப் பொடி செய்து சேர்க்கவும்.

வாணலியில் எண்ணெயை ஊற்றி கடுகு பெருங்காயத்தை தாளித்துக்கொண்டு, மிளகாய் பொடியைப் போட்டு நெடி அடங்கப் புரட்டிக்கொண்டு எலுமிச்சம்பழத் துண்டுகளைப் போட்டு லேசாகப் புரட்டி இறக்கி ஆறியதும் ஜாடிகளில் எடுத்து வைத்துவிடவும். இரண்டு தினங்கள் ஊறியபின் உபயோகிக்கலாம்.

எலுமிச்சம்பழத்தை முழுசாக கொதிக்கும் வெந்நீரில் சற்றுநேரம் போட்டு எடுத்துப் பின்னர் நறுக்கி ஊறுகாய் போடுவதும் உண்டு. நிறத்துக்குக் கொஞ்சம் மஞ்சள் பொடி சேர்த்துக்கொள்ளலாம். ஊறுகாய்போட எடுத்துக்கொள்ளும் எலுமிச்சம் பழங்கள் நன்கு முற்றிப் பழுத்ததாகவும், நிறையச் சாறுள்ளதாகவும் புளிப்பாகவும் இருக்கவேண்டும்.

### 2 நெல்லிக்காய் ஊறுகாய்

தேவையான பொருள்கள்:

| | |
|---|---|
| மிளகாய்ப்பொடி | 2 பலம் |
| உப்பு | அரை ஆழாக்கு |
| நல்லெண்ணெய் | 1 பலம் |
| மஞ்சள் பொடி | 1 கரண்டி |
| கடுகு பெருங்காயம் | சிறிதளவு |
| நெல்லிக்காய் | அரைப்படி |

**செய்முறை:** இதற்கு நன்றாக முற்றிய நெல்லிக்காய்களே ஏற்றவை. ஒரு பாத்திரத்தில் போதிய நீர்விட்டுக் கொதிக்க வைத்து மஞ்சள் பொடி சேர்த்து நெல்லிக்காய்களைப்போட்டு வேகவைக்கவும். வெந்ததும் காயை அழுத்தினால் கொட்டையை எடுக்கும்படியாக இருக்கும். கொட்டையை எடுத்துவிட்டும் ஊறுகாய் போடலாம்.

வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, பெருங்காயத்தைத் தாளித்துக்கொண்டு பொடி செய்த உப்பையும், மிளகாய்ப் பொடியையும், வெந்த நெல்லிக்காய்களையும் போட்டு சிறிது நேரம் புரட்டி இறக்கி ஆறியபின் ஜாடியில் எடுத்து வைக்கவும். சிலர் இத்துடன் கொஞ்ச வெந்தயப் பொடியும் சேர்ப்பார்கள்.

# என்ன செய்யலாம்?

—"கெளரி"—

## கணவரின் குடிப்பழக்கத்தை நீக்க . . . . .

"விடிந்தால் நடுச்சாமம் வரை வேலை. ஓயாமல் உழைத்து உடம்பும் ஓடாகிறது. எத்தனை பாடுபட்டாலும் பிள்ளைகளுக்குத் திருப்தியில்லை. பாடுபடுவதில் நான்கூட எதுவித திருப்தியடைவதாயில்லை. ஏன்தான் இந்தப் பெண்பிறவி எடுத்தேனே கடவுளே முருகா!"

இவ்வாறு ஒரே மூச்சிலேயே சொல்லி நிறுத்தினள் தங்கம். வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களையெல்லாம் சமாளித்து வந்தாலும் இடைக்கிடையே சலிப்புத்தட்டுவது இயல்புதானே! பாவம். நான்கு பிள்ளைகளுக்குத் தாயாகியிருந்தாள் தங்கத்தின் கணவர், சித்தக் குடிகாரர். வீட்டு வேலைகள், பிள்ளை வளர்ப்பு ஆகியவற்றுடன் கணவரைக் கட்டியிழுப்பதே தங்கத்துக்கு ஒரு தனிப் பிரச்னையாகவிருந்தது. அடம் பிடிக்கும் குழந்தைகளை அரவணைத்துவிட்டாலும் முரண்டு செய்யும்.

கணவர்களுடன் காலந்தள்ளுவது சில மனைவிகளுக்குப் பெரும் பிரச்சினையாகிவிடுகிறது. இது ஒரு தவிர்க்கமுடியாத சங்கடம். ஆனல் சமாளிக்கவேண்டியதுங்கூட.

தன்னந்தனியாக பிள்ளைகளின் வேலைகளையும் வீட்டு வேலைகளையும் செய்துமுடித்துவிட்டாலும் தனது கணவருக்குப் போசனம் பரிமாறுவதிலும் புத்திபுகட்டுவதிலும் தங்கம் பெரும்பொழுதைக் கழித்துவந்தாள். சுருங்கச்சொன்னல் தங்கத்தின் ஓய்வு நேரமெல்லாம் இதிலேயே போய்க்கொண்டிருந்தது. நித்த குடிகாரக் கணவருடனும் மனஸ்தாபமின்றிக் காலம்கழிக்கும் யுக்தியை தங்கம் தெரிந்துகொண்டாள். தங்கத்தின் குடும்பத்தைத் தெரிந்த யாவருக்குமே இது வியப்புத்தான். ஏதோ ஒரு இரகசியத்தைத் தெரிந்து கொண்டிருந்தாள். கண்டவர்களுடனெல்லாம் சண்டைபோடும் அவள் கணவர் அவளுடன் மட்டும் சண்டை போடாமலா இருக்கிறார். மாலை ஆரம்பித்ததும் தங்கத்தின் கணவர் வேறு மனிதராகிவிடுவார். வீட்டுக்கு வந்தால் ஒரே சத்தமும் இரைச்சலும். திருமண வாழ்க்கையின் ஆரம்பத்தில்கூட தங்கத்தின் கணவர் இப்படித்தான். அப்போது இருந்ததிலும் அவர் எவ்வளவோ திருத்தம்—காரணம் தங்கம்தான்.

சிநேகிதி என்ற அளவில் தனது கஷ்டங்களை எனக்கு அவள் சொல்லியிருக்கிறாள். கஷ்டங்களையும் சமாளித்து கணவரைத் திருத்துவதற்குத் தான் கையாளும் உபாயங்களையும் சொன்னள். அவள் கூறியதை இங்கு அப்படியே தருகிறேன். தங்கத்தைப்போன்றவர்கள் தாமும் பரீட்சித்துப் பார்க்கலாமல்லவா?

கெளரி நான் அபாக்கியவதியென்றுதான் எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். எனக்கென்னவோ அப்படிப்படுவதில்லை. மணஞ்செய்த காலத்திலேயே என்கணவர் குடிகாரராக இருந்த காரணத்தாலோ என்னவோ தெரியவில்லை. அன்று தொடக்கமாக நான் எத்தனையோ தியாகங்கள் செய்துவருகிறேன். ஓரளவில் எனக்கு இது மனத்திருப்தியளிக்கின்றது.

குடிக்கப் பழகுவதற்கு ஒரு காரணமென்றாலும் இருக்க வேண்டும். மனக்கவலைதான் பெரும்பாலான ஆண்களைக் குடிபோதையில் ஈடுபடவைக்கிறது. என் கணவர் விஷயத்திலும்கூட அப்படித்தான். அவரை அன்புடன் வளர்த்த தாயார் அவர் படிப்பு முடிந்து வேலையாகும் காலத்திலேயே இறந்தார். அவரது ஒரேயொரு சகோதரியின் கணவரும் தாயார் இறந்த சில காலத்தில் இறந்தார். தாயார் இறந்த இந்த இரு பெரும் நஷ்டம் என் கணவருக்கு ரொம்பப் பெரிதாகவே பட்டது. வாலிப வயதில் ஏற்பட்ட கவலைகளை மாற்றுவதற்காகத்தான் மது அருந்தத் தொடங்கினராம்.

பழகிய பழக்கம் விட்டுப்போவதாயில்லை. சகோதரியையும் தாயையும்பற்றியே அடிக்கடி அவர் பேசிக்கொள்வார்.

சில சமயங்களில் எனக்கும் பிள்ளைகளுக்கும் அவர் தரும் கஷ்டம் கொஞ்சமல்ல. கஷ்டங்களை அவர் தருவதில்லை; மதுதான் தருகிறது. குடியாத சமயங்களில் மிகவும் நல்லவர். ஆகையால் மதுபோதையில் அவர் எனக்குச் செய்யும் உபத்திரவங்கள் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்வேன். அவர் கொட்டும் திட்டு மொழிகளுக்குப் பதில்கொடுப்பதில்லை. இதனல் சண்டை ஏற்படுவதேயில்லை. நல்ல சமயம் பார்த்து அவருக்குப் புத்தி கூறுவேன். தான் செய்த கொடுமைகள் நினைவிலில்லாது பரிதவிப்பார்.

நான் அவரது சகோதரி சந்தோஷமாக இருப்பதற்கு வேண்டிய உதவிசெய்வேன். சகோதரியும் ஓரளவுக்கு சந்தோஷமாக இருக்கிறாள். என் கணவரும் இப்போது திருந்திவருகிறார். அவருடன் சண்டை போட்டிருந்தால் அவர் வாழ்வும் கெட்டு என் வாழ்வும் கெட்டிருக்கும். கணவர் கவலையைப் போக்குவதைவிட வேறு எது சிறந்த கடமை?"

தங்கம் கையாண்டுவந்த யுக்தி உண்மையில் பலிதமாகி வருகிறது. ஒருசில மனைவிகளைப்போலத் தங்கம் வாதாடுவதில்லை. குடிபோதையில் வீடுதிரும்பும் கணவரைத் திருத்த இது நல்ல உபாயமல்லமா?

நிலையும் நினைப்பும் ஒன்ருேடொன்று பின்னிப் பிணைந்து கொண்டு முன்னேறி வரும் இந்நாளிலும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை ஆனையிறவுக் கப்பால் என்ற பிரச்சினையே கேள்விக்குறியாக மாறிநின்று ஒலிக்கின்றது.

# நாடு நலம் பெற...

# ஆனையிறவுக்கு அப்பால்...!

—கிருஷ்ணு—

பழைய பட்டைக்கும் — துலாக் கொடிக்கும், எருதுக்கும்— கலப்பைக்கும், விடுதலைக கீதம் பாட வேண்டியவர்கள் நமது தந்தையும் பாட்டனுமல்ல. அவர்கள் வழித் தோன்றல்களாக புதுமை பூத்த உலகில் எதிர்கால நலனை நாடி நிற்கும் இளஞ் சந்ததியினரேயாகும்.

பூமண்டலத்துக்கு அப்பாலுள்ள புதிர்களைக் கண்டறிவதில் மனித சமுதாயம் தன் சிந்தனையையும் உழைப்பையும் இன்று செலவிட்டு வருகின்றது இதன் விளைவாக அதிசயிக்கத்தக்க காரியங்கள் பலவும் கண்முன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிலையும் நினைப்பும் ஒன்ருேடொன்று பின்னிப் பிணைந்து கொண்டு முன்னேறிவரும் இந்நாளிலும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை ஆனையிறவுக்கு அப்பால் என்ற பிரச்சினையே கேள்விக் குறியாக மாறி நின்று ஒலிக்கின்றது. இது யாழ்ப்பாணத்துப் பாமரவிவசாயியின் வாழ்க்கைப் பிரச்சினையோடு இரண்டறக் கலந்து நிற்கும் ஒரு காரியமாகும்.

அதாவது இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தைத் தனதாக்கிக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த விவசாயிகளை எண்ணும்போது நத்தை நடையும் அமித முன்னேற்றமும் இன்றியிருக்கும் பேதமை புலனுகின்றது.

## ஆனையிறவைத் தாண்டி அப்பாற்செல்ல வேண்டும்

வானம்பார்த்த பூமியாகிய யாழ்ப்பாணம் விவசாயத்தை மட்டும் தன் ஜீவனேபாயத்துக்குரிய தொழிலாகக் கருதியிருக்கும் நாடு. இருந்தும் அது விவசாயத் துறையைப் பொறுத்தவரை இலங்கையின் ஏனைய பகுதிகளைவிட பின் தங்கிவிட்டதென்ருல் தவருகாது. இந்த நிலைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல காரணங்களை நாம் அவதானிக்கலாம். இருப்பினும் நிலப் பஞ்சம், விவசாயத்துறை விஞ்ஞான ரீதியாக முன்னேருமை ஆகிய இரண்டையும் பிரதானமாகக் குறிப்பிடலாம். அன்றுதொட்டு இன்றுகாறும் வழிவழியாகக் கமத்தொழிலை மேற்கொண்டவர்களாகிய நமது பெற்ருர் தமது மூதாதையர் அளித்துச் சென்றுள்ள நிலத்தை மட்டுமே கருப்பொருளாக வைத்துக் கொண்டு இன்றும் சாகுபடியில் ஈடுபட்டிருக்கின்றனர். தீவிரமடைந்துவரும் சனப்பெருக்கம் யாழ்ப்பாணத்துக்கு மட்டும் விதிவிலக்கானதொன்றல்ல. இருந்தும் விளைச்சலுக்குரிய நிலத்தைப் பெருக்கிக் கொள்வதில் நம் மக்களுக்குக் குறிப்பிடத்தக்க மனமாற்றமெதுவுமேஏற்படவில்லை. கைவசமுள்ள சிறு துண்டுக் காணியை சந்ததிப் பெருக்கத்திற்கேற்ப துண்டுக்குமேல் துண்டு போட்டுப் பற்ருக் குறையுடன் போராடிவருகின்றனர். பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மார்க்கங்கள் பல இருந்தும் அவற்றைப் பயன்படுத்துவதில் அதிக நாட்டம் பெருமளவில் ஏற்படவில்லை. இந்த ஒரு இக்கட்டான நிலையிலிருந்து தம்மை விடுவிக்க வேண்டுமெனின் அவர்கள் தமது எல்லையை, அதாவது யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு எல்லையாக அமைந்துள்ள ஆனையிறவைத்தாண்டிஅப்பாற் செல்லவேண்டும்.

## படித்த வாலிபர்கள்

ஆனையிறவுக்கு அப்பால் காடுமண்டிய இடமனைத்தும் நமது அரசினரின் ஊக்கம் காரணமாக ஆங்காங்கு குடியேற்றப் பிரதேசங்களாக மாறிவருகின்றன. காடுகள் திருந்தி சாகுபடிக்கேற்ற நிலங்களாக உருவெடுத்துவருகின்றன. நல்ல நீர்த்தேக்கம் நிறைந்த குளங்களுடன் அவை செழுமையான மண்ணையும் கொண்டதாக மிளிருகின்றன. இலமென்று அசையாதிருப்பவரைப் பார்த்து, அந்நிலமென்ற நல்லாள், சிரித்து வாவென்று அழைக்கின்றபோது, கைகட்டி வாளாவிருந்து, ஒன்றுமில்லையேயென ஏங்குவது அறியாமையின்பாற் பட்ட காரியமாகும். இப்படியான வசதிவாய்ப்பைப் பயன்படுத்தி, அங்கு குடியேற்றக் காடு திருத்தி நாடுகள் செய்து களனிகள் ஆக்கிக் கோடி பொன்னைத் தேடிக்கொள்ள வேண்டியவர்கள் நமது படித்த வாலிபர்களே.

குடியேற்றத் திட்டத்தில் நிலம் தருகின்ருேம், வாருங்கள்; நிலம்மட்டுமல்ல, பயிரிடுவதற்குவேண்டிய பல்வேறு வசதிகளையும் உதவுகின்ருேம்; சற்றுத் திரும்பிப்பாருங்கள் என்று அரசாங்கம் அழைப்புக்குமேல அழைப்பு விடுத்துக்கொண்டிருந்தாலும்அதைப் பொருட்படுத்தாது புறக்கணிக்கும் பெற்ருேரே நம் மத்தியில் மிகுதியாககாணப் படுகின்ருர்கள். அவர்களைத் தான் ஒருபுறம் பொருட்படுத்தாது விடுவோம். வருங்கால வாழ்க்கைப் பாதைக்கு இன்றே அடியெடுத்துவைக்க வேண்டியவர்களான நம்இளம் சந்ததியினரைப் பற்றியும், அவர்கள் இக்குடியேற்றங்களில் காட்டும் வெறுப்பு மனப்பான்மை குறித்தும் சிந்திப்போமே!


## வலியவரும் வாய்ப்புக்கு எதிர் சவால்!

படித்த வாலிபருக்கான கூட்டுப் பண்ணைகள், நன்செய் புன்செய் நிலங்கள் மற்றும் இளைஞர்களுக்கென்றே பிரத்தியேக சலுகைகளுடன் கூடிய திட்டங்கள் பல இருந்தும் கடந்த 10 வருட காலத்தில் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறிய வாலிபர்கள் எத்தனை பேர்? தப்பித் தவறி நிலத்திற்கு விண்ணப்பித்து அதனைப் பெற்றுக்கொண்டபின் காடுகளைக் கண்டதும் பயந்து மிரண்டு திரும்பியவர்கள் பலர்; வெட்டிய காடுகளை இடையிலே கைவிட்டு மனஞ் சோர்ந்து வந்தர்களுமுண்டு. அதுமட்டுமல்ல, வன்னிக்காட்டில் வாழ்வதற்கு என்ன வசதியிருக்கின்றது என்று சொல்லிக்கொண்டு பயிரிட்ட நிலத்தைப் பாழடையவிட்டுத் திரும்பியவர்களையும், பிறர் கையில் அதனை ஒப்படைத்து விட்டு மறைமுகமாக ஓடிவந்தவர்களையும் நாம் மறந்துவிட முடியாது. இத்தகைய இழி செயல்கள் நம் இளஞ் சந்ததியினரை ஏழ்மைப்படுத்தும் சின்னங்களாகும். அதுமட்டுமல்ல வலிந்து தேடி நம்மையடையும் வாய்ப்புக்கு எதிராக விடுக்கும் ஒரு சவாலுமாகும்.


சரித்திர ஏடுகளை நாம் புரட்டிப் பார்ப்போமானல் வன்னிப் பிராந்தியம் பண்டைக் காலத்தில் மக்கள் பசிப்பிணி அகற்றும் உயிரான உழவுத் தொழிலில் மிகுந்த மேம்பாடு கொண்டு மிளிர்ந்தது தெரியவரும். ஆனல் காலப்போக்கில், வளர்ந்து மக்கள் மன

(10ம் பக்கம் பார்க்க)


# ஓர் முக்கிய வேண்டுகோள்



இந்த வருஷம் தொட்டு உங்களுக்கு கவலை இல்லாத வாழ்வு உண்டு. அதற்கு உங்களது உழைப்பில் சிறிதாக இருந்தாலும் சரி, ஓர் மிகச் சிறிய பாகத்தை சேமித்து ஓர் கணக்கில் ' றிசேவ்'பண்ணி வைக்கவேண்டும். அது முடியாது விட்டாலும் சேமிப்பு, முயற்சி, சிக்கனம் - வாழ்க்கையின் வெற்றி வழி என்பதை உணரவேண்டும்.



தலைமை ஸ்தாபனம் - யாழ்ப்பாணம்

கிளை ஸ்தாபனம் - நாவற்குழி

சேமிப்புக்கு கணக்கில் எவ்வளவு தொகையும் போடலாம், எடுக்கலாம். அவைகள் எல்லாம் பாஸ் புத்தகத்தில் பதியப்படும். மாதம் மாதம் வட்டி கொடுக்கப்படும். அல்லது பாஸ் புத்தகத்தில் கூட்டப்படும்.

## 6 வீத வட்டி உண்டு.

தொடர்ந்து கட்டும் கணக்கு (Recurring Deposit Account) மாதம் 10 ரூபாவீதம் 78 மாதம் கட்டினுல் 1000 ரூபாவாக கொடுக்கப்படும்.

அதே போல் 25×78=2500, 50×78=5000, 100+78=10000, 10+240=4000

## சிலோன் றிசேவ் லிட்., சேமிப்பு வங்கி

பஸ் நிலயத்திற்கு வடக்கே, (1959-ம் ஆண்டு ஸ்தாபிதம்) யாழ்ப்பாணம்.

# இராஜதந்திரப் பேச்சு வார்த்தை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துபேசி தனது செல்வாக்கைப் பிரயோகித்து எனது எண்ணத்தை நிறைவேற்ற உதவி செய்தார்.

## பயன் தரவில்லை

எனது மறுதரப்பு ஒப்பந்தயாரி - பிரிட்டிஷ் உணவுமந்திரி ஸ்ற்றச்சியைப் பயங்காட்டிப் பேசிய பகுதி பின்வருமாறு:- "இந்தப் பேச்சுவார்த்தைகள் நான் எண்ணியவாறு நல்ல பயன்தரவில்லையானால் இந்த ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டுபோகத் தயாராக இருக்கிறேன். ஆனால், அப்படி முறிவெய்தி நான் மீள நேருமாயின், ஒலிவர் கடைப்பிடித்த 'யோக்கியமற்ற செய்கை' யிருக்கிறதே, அதிலும் பார்க்க முழு அயோக்கியத் தனமான செய்கைகளை இலங்கை அரசாங்கம் செய்யவும் கூடும். செய்யும் வழிவகைகளும் எமக்குத் தெரியும். அந்தப்பொறுப்பு உங்களையேசாரும்." இருபத்து நாலுமணிநேரங்களுக்குள் ஸ்ற்றச்சி எனது எண்ணத்தை ஏற்றுக்கொள்ள இணங்கியதும் எமக்கு நிலைமை சாதகமாக மாறியமைந்தது. உடனே லண்டன் ஹோட்டலிலிருந்து டி. எஸ். ஸுடன்கொழும்பு, பிரதமர் வாசஸ்தலமாகிய அலரி மாளிகை (டெம்பிள்ட்றிஸ்)க்கு போன் மூலம் தொடர்பு கொண்டு ஒப்பந்த அனுகூலத்தை அறிவித்தேன். அவரின் அங்கீகாரத்தை ஆலோசித்து அறிவிக்கும்படி கேட்டேன்.

ஒலிவர் குணத்திலக்கா அப்போது லண்டனில் நடைபெற்றுக்கொண்டிருந்த டாபி குதிரைப்பந்தய ஓட்டங்களில் தானும் கலந்துகொள்ளவந்திருந்தார். எமது பேச்சுவார்த்தைகள் பற்றியோ அல்லது ஒப்பந்தத்தைப் பொறுப்பேற்கும் விஷயம் பற்றியோ டி. எஸ். அவருக்குக் கேபிள் உத்தரவு அனுப்பினரோ என்னவோ, நானென்றும் அறியேன். எனது ஒம்ர ஆலோசகராக என்னுடன் வந்த என் நிரந்தரக்காரியதரிசி கே.சோமசுந்தரமும், நானும் தங்கியிருந்த ஹோட்டலுக்கு அன்றொருநாள் ஒலிவர் திடீர் விஜயம் செய்தார். ஆறுதலாக, அமைதியாக எனது காதுக்குள்பேசி ஒப்பந்தம் பற்றிய தகவல்களை அறியவிரும்பினர். சக மந்திரி என்ற தோரணையில் நான் நடந்தவற்றைச் சொன்னேன். அவருக்கு மகிழ்ச்சி பிறிக்கொண்டுவந்தது. தன்னையே மறந்துவிட்டார். சந்தோஷ மிகுதியால் குதித்தார் - "சபாஷ்! சுந்தரா, நல்ல சாதனை!! நன்மையே செய்தனை!!!" என்று உள்ளம் புளகாங்கிதம் கொள்ள என் முதுகைத் தட்டிக்கொடுத்தார் ஒப்பந்தயாரி - ஸ்ற்றச்சியை அச்சுறுத்திய எனது மனோரதத்தை வியந்துகொண்டாடி முகமன் பேசினர். டி. எஸ். ஸிலும் பார்க்க எனது நோக்கையும், செயலையும் ஒலிவர் சரிவரப்புரிந்து மெச்சினர்.

## டி. எஸ். மகிழ்ச்சி

உலகச் சந்தையில் எங்களுடன் (இலங்கையுடன்) கொப்பரு, தேங்காய் எண்ணை ஆகிய பொருள்களில் போட்டிபோடுபவர்கள், விசேடமாக பிலிப்பைன்ஸ் தீவுகள் அரசாங்கத்தினர் எனது ஒப்பந்தவெற்றி கேட்டு அதிசயமுற்றனர். இந்திய அரசாங்கம் மிகவும் மனக்கொதிப்படைந்தது. இலங்கை அரசாங்கம் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து இந்த ஏற்றுமதிப் பொருள்களுக்குக் கூடிய விலைத்தரிப்பைப்பெற்று மகிழ முடிந்தது. டி. எஸ். மகிழ்வும் அதிசயமும் அடைந்தார்.

எனது முயற்சியால் புது ஒப்பந்தம் நிறைவேறிய பல மாசங்களின் பின்னர் அதிலிருந்து வந்த அதிகப்படியான ஆதாயத்தைப் பரிசீலனை செய்துபார்த்தனர். இந்த இரண்டு பொருள்களின் (கொப்பரு, தேங்காய்எண்ணை) ஏற்றுமதியிலிருந்துமட்டும்,புது ஒப்பந்தத்தின் படிக்கு விலை கூட்டியபடியால், அந்தக்கூடிய விலைத்தொகையின் விகிதப்படி, ஒரு நூறுகோடிருபாய்க்கும் கூடுதலான மேலதிக பணத்தை, வருவாயாக இலங்கை பெற்றுக்கொள்ள முடிந்தது என நிரூபிக்கப்பட்டது. ஒரு நொடியிற் பேச்சு ஒரு நூறு கோடி ரூபாய் ஆச்சு! இந்த அதிர்ஷ்டலாபத்திலிருந்து பெற்றுக்கொண்ட அதிகத்தொகைப் பணத்தினலேதான் அரசாங்கம் அந்த நாட்களில் அநேக அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டுசெலுத்த முடிந்தது. கல்லோயாப் பள்ளத்தாக்கு விவசாய அபிவிருத்தித்திட்டம் இதற்கோர் அழியாதசின்னமாயிருப்பதைக் காணுந்தோறும் எனது உள்ளம் உவகையூரிக்கின்றது. இன்னும் இந்த அதிர்ஷ்ட ஆதாயத்திலிருந்துதான் எனது வவனியாத் தொகுதிக்கு வேண்டிய அபிவிருத்தி முன்னேற்ற வேலைகளுக்கு எவ்வளவு பணத்தை நான் நியாயமானதென்று கண்டு விரும்பிக் கேட்டேனே அவ்வளவையும் அரசாங்கம் மனநிறைவோடு உடனேதந்து உதவியது.

இனியெழுதவிருக்கும் மற்றுமோர் கடிதத்தில் இந்தப் பேச்சுவார்த்தைகள் பற்றிய உள்விரகசியங்களை விபரமாக விளக்குவேன்.

இவைகள் நடந்து நாட்கள் பல ஆகவில்லை. நான் மந்திரி சபையிலிருந்து பதவிநீக்கம் செய்யப்பட்டேன்! இந்தியர் - பாகிஸ்தானியர்பிரஜாவுரிமைச் சட்டமசோதாவில் நான் அரசாங்கத்தை ஆதரிக்கத் திட்டவட்டமாக மறுத்துவிட்டேன். மந்திரிசபையுள் அரசாங்கத்தின் போக்கையும், கொள்கையையும், "தர்மநீதிக்கு மாறானது, துரோகமானது" என்றெல்லாம் வன்மையாகக் கண்டித்துப் பேசிவிட்டேன். "முகநக நட்பது நட்பன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென்றிடித்தற் பொருட்டு" என்னும் பொய்யாமொழிப்புலவர் தம் பொன்னுரைக் கிணங்க, கற்பவை கற்றபின் அதற்குத்தக நிற்றலாகிய நற்செய்கைக்குத் தண்டனையாக, டி. எஸ். சேனநாயக்கா என்னை மந்திரிவேலையிலிருந்து 'டிஸ்மிஸல்' (பதவி நீக்கம்) செய்தார். இதன் பிரகாரம், 1948-ம் ஆண்டு டிசம்பர் மத்தியிலிருந்து நான் ஒலிவர் குணத்திலக்காவுக்கு மந்திரி சபை நண்பனுக இருந்துவந்த நிலைமையைவிட்டு நீங்கினேன்!!

ஹறின்! அறிந்துகொள் !! கடமை செய்வோர்க்கு கவலைகள் இல்லை!!!

என்றும் உங்கள் மேல்
பட்சம் மறவாத,
அப்பா.

# ஆனையிறவுக்கு அப்பால்..

(9ம் பக்கத் தொடர்ச்சி)

திலே உறைந்துவிட்ட மேலை நாகரிகத்தின் காரணமாக அந்நிலங்கள் கைவிடப்பட்டன. நெருக்கமும், சுகமுமெனக் கருதிய மக்கள் அதனைவிட்டு விட்டதன்பேருக இன்று அவை காடுபற்றிக் காட்சியளிக்கின்றனவேதவிர, மக்களின் பண்டைய உறைவிடங்களிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த பூர்வீக வனந்தரங்கள் அல்ல. இருந்தும் வாலிபர்களின் மனதில் எதிர்காலச் சிந்தனையோடு கூடிய வளமான எண்ணம் இந்த இடங்களைப் பொறுத்தவரை அமையாமைக்குக் காரணந்தான் என்ன?

சுற்றமும் குழலும் பேணிக்கொண்டு குண்டுச் சட்டிக்குள் குதிரை விட்டுக்கொண்டிருப்போமானல் காலப்போக்கில் எந்த விதமான செயலையும் செய்யத் திராணி யிழந்தவர்களாவோம். இந்த அவகேடான தன்மையை அகற்றி ஆவனபுரிதல் வேண்டுமெனில் எமது எல்லையைக கடந்து எட்டச் செல்லவேண்டும். ஆனையிறவுக்கு அப்பால் அமைப்புடன் விளங்கும் நிலங்களை யாம் அண்டவேண்டியவர்களே. ஆங்காங்கு குடியேறி மக்கள் விவசாயத் துறையில் பெருமளவு முன்னேறிவருகின்றார்கள். கூட்டுப் பண்ணைகளனிகள் என்பன உருவாகியிருக்கின்றன. இந்த நிலையில் மக்கள் வாழ்வதற்கு தகுதியான வசதி வாய்ப்புகள் பெருமளவில் அங்குண்டு. ஆனலும் நாம் இன்னமும் தயங்குகின்றோம்.

"பெற்றதாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவவானிலும் நனி சிறந்தனவே"

என்ற அமரகவியின் பாடல் குறிப்பிடும் நாட்டுப் பற்றுத்தான் இதற்குக் காரணமல்ல. ஒருவரோடொருவர் அண்ணன் மாமன், மச்சான் என்ற உறவு முறைகளுடன் ஒருமித்து வாழ வேண்டும் என்ற மனப்பான்மையே இதற்குக் காலாகின்றது. இந்த நிலை நீங்க வேண்டும்.

"திரைகடலோடியும் திரவியம் தேடு"

என்ருள் ஔவை. ஆனல், நாம் இன்று திரைகடலோடித் திரவியம்தேடவேண்டியதில்லை. எமது அன்னை பூமியிலேயே நின்று வரண்ட வாழ்க்கையை வளமாக்கிவிடலாம்.

அழகுள்ள கிணறு கிண்டி அதிலிருந்து நீரைத்தேக்கி, பாழான உடல் மென்மேலும் பாடுபட வைத்து ஒருவேளை உணவுக்காக யாம் இந்தச் சொந்தப் பூமியில் படும் அவஸ்தையைவிட ஒரளவுக்குச் சாகுபடிக்கு ஏற்ற வகையான வசதிவாய்ப்புகள்உள்ள இந்த இடங்களை நாடிச் செல்லல் அவசியமென்பதை இனியாவது உணர்தல் வேண்டும்.

## புதுமைப் போராட்டம்

அடுத்து விவசாயத் துறையில் யாழ்ப்பாணத்து விவசாயி விஞ்ஞான ரீதியான முன்னேற்றம் காணுமலிருப்பது பற்றிய பிரச்சினை குறித்துக் சிறிது சிந்திப்போம். உலகத்தின் பல பகுதிகளிலும் வளர்ந்துவரும் விஞ்ஞானத்தின் பேருக நவீன இயந்திரங்கள் புரட்சி செய்கின்றன. சமீபத்தில் ஜெர்மன் நாட்டில், 'மனிதன் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு ஒரு விசையை அமுக்கிவிட்டால் நிலத்தை உழுது செல்வதற்கான இயந்திரம் ஆக்கப்பட்டிருக்கின்றது. இந்த இயந்திரத்தின் பலன் காலப்போக்கில் எமது நாட்டிற்கும் கிட்டக்கூடும். ஆனல் இத்தகைய புதுமைகளைப் பற்றிய சிந்தனை இன்னும் நமது விளைநிலங்களைப் பெரும்பாலும் நெருங்கவில்லை. விளைநிலங்களுக்கும் விஞ்ஞான சாதனைகளுக்குமிடையில் நமது தாய் தந்தையர் பழமையின் பெயரால் பலமான அரண் கட்டி எழுப்பியிருக்கிருர்கள். இந்த அரணைப் பாரம்பரியப் பெருமையோடு பழுதுருமல் பாதுகாத்தும் வருகிருர்கள். பாட்டன், பூட்டன், முப்பாட்டன் காலத்துப் பழமையைக் கட்டிக் காத்து வருவதுதான் தமக்குப் பெருமையென்றும் அதுதான் சிறப்போடு வாழ்வு அளிக்குமென்ற கருத்தும நமது பெரும்பாலான விவசாயப் பெருங்குடி மக்களிடம் ஊறிப்போயிருக்கின்றதைஇன்னமும் காண்கிறோம்.

கிருமிநாசினி, நோயை முற்றுகப் போக்காது என்பாருமுளர். இப்படிப் பழமையைப் பெரிது படுத்தி, புதுமையை வேண்டுமென்றே ஒதுக்கித் தள்ளுகின்ற மனப்பான்மை இயல்பாகவே நமது யாழ்ப்பாணத்து விவசாயிகளுக்கு இருந்து வந்திருக்கின்றது. இது நம் சொந்த மண்ணோடு இரண்டறக் கலந்த ஒரு பாரம்பரியம்.

வட பகுதியில் புகைவண்டிப் பாதைகள் அமைத்த போது புகை வண்டி ஓடும் ஓசை காரணமாகக் கோழிகள் முட்டையிடாது விடுமென அவர்கள் குற்றஞ் சாட்டியிருக்கிருர்களாம். இப்படியாகப் பழமையைப் பேணுவதும், பழமையையே எல்லாம் வல்லது என்பதுமான குருட்டாம் போக்கில் இவர்கள் இன்று வரை சென்று கொண்டிருப்பதினல் புதுமையுள்ளே புக அஞ்சுகிறது. பழமையை யாம் பரிகசிக்கவில்லை. பழமைப் போக்கிலுள்ள பற்றுதலை முற்ருக நீக்க வேண்டுமென்றும் வற்புறுத்த விரும்பவில்லை. பழமையிலே காலூன்றி, புதுமையைப் புகுத்துவோம்: அதனை வளர்த்துப் பலன் காண்போமென்பது தான் இன்றைய உலகத்தின் நாதமாக ஒலிக்கின்றது. காலத்தோடு ஒட்டிய கருத்துக்களும் நவீன சாதனைகளுக்கும் செவிசாய்க்க வேண்டுமென்ற இன்றைய குரல் யாழ்ப்பாணத்து விவசாயிகளின் காதுகளுக்கு எட்ட வேண்டுமென்று வற்புறுத்துவதல் தவறெதுவுமிருக்க மாட்டாது.

## மறுமலர்ச்சித் தூதுவர்கள்

பழைய பட்டைக்கும்—துலாக் கொடிக்கும், எருதுக்கும்—கலப்பைக்கும் விடுதலைக் கீதம் பாட வேண்டியவர்கள் நமது தந்தையும் பாட்டனுமல்ல. அவர்கள் வழித்தோன்றல்களாக புதுமை பூத்த உலகில் எதிர்கால நலனை நாடிநிற்கும் இளஞ் சந்ததியினரே யாகும். பெற்ருரின் மனப்போக்கில் நன்மாற்றம் விளைவிக்க வேண்டிய பொறுப்பு நம்மைப் பெரிதும் சார்ந்து நிற்கிறது. அதற்குரிய வாய்ப்பை ஆனையிறவுக்கு அப்பாலுள்ள குடியேற்றத் திட்டங்கள் அளிக்கக் காத்திருக்கின்றன. விஞ்ஞானத்தின் விந்தைகளை, யாழ்ப்பாண விவசாயத்துறைக்கு அழைத்து வரும் தூதுவர்களாக அங்கு யாம் செல்லுவோம். அனுபவ ரீதியாகப் பெற்ற வெற்றிச் சாதனைகளை குடாநாட்டிற்குள்ளும் புகுத்துவோம். இதன் மூலம் ஏற்படக் கூடிய விவசாய மறுமலர்ச்சி யாழ்ப்பாணத்தை வளம்படுத்தும் பேரவாவுடன் எதிர்நோக்கி நிற்கிறது.

இந்த நற்பணியை மேற்கொண்டு நிறைவேற்ற வேண்டிய மாபெரும் பொறுப்பை பல்வேறு ஸ்தாபனங்களும் முக்கியமாக இளைஞர் விவசாயக்கழகங்களும் ஏற்று நடத்த வேண்டும். அப்பொழுது தான் ஈழம் வளம் கொழித்து வாழ்வளிக்கும்.

[அண்மையில் இலங்கை வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவு இங்கு தரப்பட்டுள்ளது.]

# பழங்கதை பேசிப் பயனில்லை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யும். ஒரு படிப்புதவி இரண்டு ஆண்டுத் திட்டம் அல்லது மூன்று ஆண்டுத் திட்டமாக அமையலாம். அதேபோலத் தமிழ்நாட்டுத் தமிழ் அறிஞர்கள் இருவராவது ஒரு ஆண்டுக்குப் பிறநாடுகளில் உள்ள தமிழ் ஆராய்ச்சி நிலையங்களுக்குச் சென்று அங்கு நடந்து வரும் ஆராய்ச்சிகளையும் முறைகளையும் படிப்பதற்கும் படிப்புதவி கொடுக்க வேண்டும்: உதாரணமாக பாரசீகத்தில் உள்ள கிழக்குலக ஆராய்ச்சிக் கழகத்தின் முடிவுகளும் முறைகளும் (தமிழ் சம்பந்தமான ஆராய்ச்சி) விரும்பிப் படிக்க வேண்டியவை.

பழையகாலத்தில் தமிழ் நாட்டுடன் தொடர்புகொண்டிருந்த பிறநாடுகளின் நூலகங்கள் அரும் பொருட்சாலைகளில் தமிழ் ஆராய்ச்சிக்கு உதவக்கூடிய சாத்தியக் கூறுகள், சான்றுகள் உண்டா என்பதையும் ஆராயலாம். இப்படிப் பலவகையில் முயற்சி செய்யலாம். தமிழ்நாட்டு அரசாங்கம் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் சம்பந்தமான ஆராய்ச்சிக்கு உதவும் ஏடுகள், கையெழுத்துச் சுவடிகள், பழைய நூல்கள், தமிழ் அறிஞர்கள் கடிதங்கள் முதலியவற்றை வைப்பதற்கு ஒரு அரும்பொருட்சாலையை உடனடியாக அமைத்துப் பணியாற்ற வேண்டும். இதனை இதன் அமைபிற்கும் நிர்வாகத்திற்கும் ஐ. நா. கலாசாரப் பகுதியினரிடம் உதவியும் யோசனையும் கேட்கலாம். பாரசீகப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் ஏரியலின் தமிழாராய்ச்சி முடிவுகள் பல இன்னும் யாரும் தேடுவார் அற்றுக் கிடக்கின்றன. இவற்றை வாங்கி இந்த அரும்பொருட்சாலை பேணலாம்.

இப்படி இன்னும் எங்கெங்கு எத்தனை ஆராய்ச்சி முடிவுகள் காலத்தின் கொடுமைக்கு இரையாகின்றனவோ? செக்கோஸ்லவேக்கியாவைச் சேர்ந்த டாக்டர் ஒற்றக்கார் பேற்ரேல்ட் தமிழுக்கும் சிங்களத்திற்கும் உள்ள மொழியியற் தொடர்புகளை கிட்டத்தட்ட முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் சொல்லியல், எழுத்தியல், ஒலியியல் ஆராய்ச்சி அடிப்படையில் வலியுறுத்தினர். இந்த முடிவுகளை மெழுகு அச்சுருளிகளில் பதித்து வைத்திருந்தார். ஆனல் இது காலத்தின் கொடுமைக்குப் பலியானதால் இன்று உதவாமல் அழிந்துவிட்டது. இத்தகைய அபாக்கியம் நம்மை மேலும் அடையாமல் செய்ய இந்த அரும்பொருட்சாலை உதவிசெய்ய முடியும். இந்தப் பொறுப்புகளை உணர்ந்து தமிழ் நாட்டு அரசாங்கம் விரைவில் புதிய திருப்பத்தை ஏற்படுத்துவது மிகவும் விரும்பத்தக்கது. "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் ஆசைக் கனவை நனவாக்கித் தரவேண்டும்.

திட்டங்கள் பெரிதுதான்; ஆனல் திடசங்கற்பம் உண்டானல் யாவும் இலகுவாக நிறைவேற்றக் கூடியவை. இன்று தமிழ்நாட்டிலும், தமிழின் பரணிபாடும் ஏனைய நாடுகளிலும் நல்ல சூழ்நிலையும் சந்தாப்பமும் உண்டு இந்தப்பணியில் இறங்குவதற்கு... இதை இன்று நாம் பயன்படுத்தாவிட்டால் இதுவே நாம் தமிழ் மொழிக்கும். வருங்காலத் தமிச் சந்ததிக்கும் செய்யும் துரோகமாகும். எண்ணியர் திண்ணியராஞல் எண்ணியதை எய்த முடியும். எல்லோரும்கூடி உடனே செயற்படவேண்டும்.

# சிறுவர் பூங்கா

## வைராக்கியம்

-அ. டேவிற் இராசையா-

அவன் பெயர் சுந்தரம்.

வயது முப்பது இருக்கும். எடுப்பான தோற்றம். எஸ். எஸ். ஸி. படித்திருக்கிறான். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் பிரபல இன்ஜினியரிங் கம்பெனியொன்றில் சேல்ஸ்மனாக வேலைக்குச் சேர்ந்து படிப்படியாக உயர்ந்த பதவிகளை வகித்து, இன்று தன் அயராத ஊக்கத்தினால் அந்தக்கம்பெனியில் ஒரு அதிகாரியாக விளங்குகின்றான். காரணம், அவன் வாழ்க்கை மேல் வைத்திருந்த தன்னம்பிக்கைதான்.

அவனுடைய உயர்வைக் கண்டு ஊரார் அதிர்ச்சியடைந்தனர். சில நண்பர்கள் பொறாமைப் பட்டனர். ஆனால், முகஸ்துதிக்காக வாழ்த்தினர்.

அன்று ஒருநாள் —

சுந்தரம் வேலை பார்க்கும் இன்ஜினியரிங் கம்பெனியில் குமாஸ்தா வேலை ஒன்று காலியாக இருந்தபடியால் விண்ணப்பித்திருந்தவர்களில் பொறுக்கியெடுத்த சிலருக்கு நேர்முகப்பரீட்சை நடத்திக்கொண்டிருந்தான் சுந்தரம். பரீட்சையை நடத்துவது பெரியஅதிகாரிகளின் பொறுப்புத் தானே?

"கடிதமூலம் தெரிவிக்கிறோம்" என்று பரீட்சைக்கு வந்திருந்தவர்களை அனுப்பினர். கடைசியாக ரவி என்ற பெயர் கூப்பிடப்பட்டது. அந்தப் பெயருக்குரியவனும் குமாஸ்தா வேலைக்கே உரிய தோற்றத்தோடு சுந்தரத்தின் முன்னால் வந்து நின்றான்.

ரவியின் முகத்தை வெகு உன்னிப்பாகக் கொஞ்சநேரம் பார்த்துக் கொண்டேயிருந்தான் சுந்தரம். எங்கேயோ எப்போதோ அவனைக்கண்ட மாதிரி சுந்தரத்தின் அடிமனத்தில் உறுத்திற்று. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர்நடந்த சம்பவமொன்று அவன் கண் முன்னால் தோன்றியது.

சுந்தரம் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவன். ஐந்து பேர்களில் அவன் தான் மூத்தபிள்ளை. அவனுடைய தந்தையின் சொற்ப சம்பாத்தியத்தை மட்டும் நம்பி வீட்டுக்காரியங்களைச் செய்யமுடியாமல் அவன் தாய் மிகவும் துன்பமுற்றாள். அவள் எலும்புந்தோலுமாய் தோற்றமளித்தாள். அவளால்வெளியே போய் வேலையொன்றும் செய்ய முடியாத நிலையில் எட்டாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த சுந்தரத்தை பங்களா ஒன்றில் மாதம் பதினைந்து ரூபா சம்பளத்தில் எடுபிடி வேலையில் கொண்டுபோய்ச் சேர்த்தாள்.

அந்தப் பதினைந்து ரூபா அவளுக்கு என்னமோ பெரிய சம்பளம் போல் பட்டது. "அப்பாடி, மூத்தவனை வேலையொன்றில் கொண்டுபோய்ச் சேர்த்தாயிற்று; இனிமேல் நமக்கு கொஞ்சம் கஷ்டம் நீங்கினது போல இருக்கும்" என்று அவள் உள்ளம் பூரித்து உவகையடைந்தாள். ஆனால் -- அவனுக்கு இந்த எடுபிடி வேலையில் கொஞ்சம் கூட நாட்டமில்லை. பள்ளியில்போய் படிக்கத்தான் விருப்பம். பாவம் - என்ன செய்வது? படித்து முன்னுக்கு வர அவா இருந்தும் வாய்ப்பு இல்லையே!

காலை வேளைகளில் வீட்டில் எடுபிடி வேலைகள் முடிந்ததும் மாலை வேளைகளில் அந்த வீட்டில் இருந்து ஐந்து வயது நிரம்பிய பிள்ளையை வீட்டு முற்றத்தில் வைத்து விளையாடிக் கொண்டிருப்பான் சுந்தரம். அப்போது அந்த வழியாக புத்தகங்களைக் கரங்களில் ஏந்திக் கொண்டு மகிழ்ச்சியோடு செல்லும் மாணவர்களைக் கண்டு பெருமூச்சு விடுவான். அந்த நேரத்தில் அவனுடைய சிவந்த முகத்தில் கண்ணீர்கண்ணீராக வடியும். 'இந்த அருமையான பள்ளி வாழ்க்கையைக் கடைசிவரை எனக்கு அநுபவிக்க கொடுத்துவைக்கவில்லையே' என்று மனத்துக்குள் கூறிக்கொள்வான். தன்னோடு படித்த மாணவ நண்பர்கள் அந்த வழியாகப் போவதைக் கண்டதும் ஓடிப்போய் ஒளிந்து கொள்வான.

அன்று —

அவன் வேலைசெய்து வந்த பங்களாவில் ஒருவரிடமும் கூறாமல் தன் வீட்டிற்கு ஓடி வந்துவிட்டான். வீட்டில் சுதந்திரமாக வாழ்ந்துவந்த அவனுக்கு பங்களா வாழ்க்கை இருட்டறையில் தன்னை அடிமையாக அடைத்து வைத்திருப்பது போன்றிருந்தது.

மகன் சுந்தரத்தின் எதிர்பாராத வரவைக்கண்ட அவன் தாய், ஏதாவது பொருளைக் களவெடுத்துக்கொண்டு வந்து விட்டானோ என அஞ்சி, அவனை பங்களாவிற்கு அழைத்துச் சென்றாள்.

"அம்மா இனிமேல் நான் அங்கு வேலைசெய்யமாட்டேன்; மறுபடியும் படிக்கத்தான் போகிறேன்" என்று அழுத்தமாக சுந்தரம் தாயிடம் கூறினான்.

சுந்தரத்தின் தாயையும் சுந்தரத்தையும் கண்ட எஜமானி அம்மாள் அவன் மீது சீறிப் பாய்ந்தாள். "இரு, உன்னை பொலிசிடம் பிடித்துக்கொடுக்கிறேன். ஐயா வரட்டும்" என சுந்தரத்தைப் பயங்காட்டினாள்.

"இல்லை, அவனுக்கு வேலை செய்ய இஷ்டம் இல்லையாம். படிக்கத்தான் போகிறானாம். இப்படி அவன் மறுபடியும் யாரிடமும் சொல்லாமல் வந்து விட்டால் .... வீட்டிற்கு வராமல் வேறு எங்கேயாவது போய்விட்டால் ...."— இது சுந்தரத்தின் தாயின் குரல்.

"உன்பிள்ளை என்ன படித்து பெரிய உத்தியோகம் பார்க்கப் போகிறானாக்கும்? பேசாமல் இங்கே அவனை விட்டுவிட்டுப் போ. இன்னும் கொஞ்சக் காலம் சென்றதும் ஐயாவே அவனை தன்னுடைய கந்தோரில் பியூனாக இழுத்துப்போட்டுக் கொள்வார்." — வீட்டு எஜமானியம்மாள் கூறினாள்.

"உன் பிள்ளை என்ன, படித்து உத்தியோகம் பார்க்கப் போகிறானாக்கும்" என்ற வார்த்தைகள் சுந்தரத்தின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்துவிட்டன. "ஆமாம், நான் உத்தியோகம் தான் பார்க்கப்போகின்றேன்" என்று சுந்தரம் வைராக்கியம் எடுத்துக் கொண்டான்.

"மன்னித்துக் கொள்ளுங்கள் அம்மா" என்று எஜமானியம்மாளிடம் கூறிவிட்டு சுந்தரத்தை வீட்டிற்கு கொணர்ந்து, அடுத்த நாளே அவனை பள்ளியில் கொண்டுபோய்ச் சேர்த்தாள், தாய்.

இன்று சுந்தரத்துக்கு முன்னால், வேலை கிடைக்குமா கிடைக்காதா என ஏங்கிக் கொண்டிருக்கும் ரவி தான் அன்று சுந்தரத்தோடு விளையாடிய ஐந்துவயதுப் பிள்ளை— அந்த எஜமானியம்மாளின் மகன்!

சுந்தரத்தின் வைராக்கியம் நிறைவேறியது.

### ஐயோ, பாவம்!

செவிடன்:- இப்போது உன் மாமனார் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

மற்றவர்:- வைத்தியம்.

செவிடன்:- பைத்தியமா! ஆறா, எவ்வளவு தங்கமான ஆள்.

அனுப்பியவர்:- 'சிலாஸ்'

### ஒழுக்கம்

வாள்முனையே வலிமையுடையது என்றான் நெப்போலியன். நாமுனையே வலிமையுடையது என்றான் நாவலன். பேனா முனையே வலிமையுடையது என்றார் வால்டேர். அறிவுமுனையே வலிமையுடையது என்றார் ஷா. இவை அனைத்தையும் மறுத்து ஒழுக்க முனையே வலிமையுடையது என்றார் வள்ளுவர். ஒழுக்க மற்றவனுடைய வாளோ, நாவோ, பேனாவோ, அறிவோ வலிமைபெறாது; பெற்றாலும் உயர்வுபெறாது.

— கி. ஆ. பெ. விசுவநாதம்.

### வெண்ணிலா


— வித்துவான் க. வேந்தனார் —

பாலைப் போல வெண்ணிலா
பார்க்க நல்ல வெண்ணிலா
கோல வானில் நின்றொளியைக்
கொட்டு கின்ற வெண்ணிலா

வெள்ளிக் கூட்டம் சுற்றி நிற்க
விளங்கு கின்ற வெண்ணிலா
அள்ளி அள்ளிச் சோற்றையூட்டி
அம்மா காட்டும் வெண்ணிலா

கரிய முகிலுள் ஓடி ஒழித்துக்
கள்ளம் பழகும் வெண்ணிலா
தெரிய வில்லை என்று தம்பி
தேடிச் சிணுங்கும் வெண்ணிலா

கலா தம்பி காந்தியோடு
கையைக் கோர்த்துக் கொண்டு
நிலா நிலா என்று கூவி
நின்று துள்ளும் வெண்ணிலா


நாளுக்கு நாள் கடின பாவனைக்கு நிகரற்று விளங்குவது.

கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷேர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோக் மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

# ஜெனரல் சலான் கைது

## அல்ஜீரியாவில் இனி அமைதி ஏற்படுமென நம்பிக்கை

அல்ஜீரியர்ஸ் ஏப். 21

அல்ஜீரியா விடுதலையை எதிர்த்து அல்ஜீரியாவில் தேசீயவாதிகளைத் தினசரி கொன்று குவித்துவரும் ஐரோப்பிய தீவிரவாதிகளின் இரகசிய ராணுவ ஸ்தாபனத்தின் பிரஞ்சு ஜெனரல் சலான் னேற்று அல்ஜீயர்சில் பிரஞ்சு பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டார். அவர் உடனடியாக பாரிசுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

62 வயதான ஜெனரல் சலானுடன் அவரது மனைவி, மக்கள் மற்றும் இரகசிய ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

அல்ஜீரியாவில் கொடிய போராட்டத்தின் தலைவராக விளங்கிய ஜெனரல் சலான் கைது செய்யபட்டு விட்டதால் அங்கு இனி இரகசிய ராணுவ ஸ்தாபனம் மறைந்துவிடுமென்று கருதப்படுகிறது.

### சுட்டுத்தள்ள உத்தரவு

இரகசிய ராணுவ ஸ்தாபனத்தினர் எவராவது கண்ணில் பட்டதும் அவர்களைச் சுட்டுத் தள்ளும்படி அல்ஜீரியாவிலுள்ள பிரஞ்சு பாதுகாப்புப் படைகளுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது. இந்த உத்தரவு திங்கட்கிழமை தொடக்கம் அமுலுக்கு வரும்.

ஜனதிபதி டிகோலின் அல்ஜீரியக் கொள்கையை எதிர்த்து அல்ஜீரியாவில் 1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிரஞ்சு ஜெனரல்கள் நடத்திய கிளர்ச்சியில் முக்கிய பங்கு கொண்டிருந்த தாகக் குற்றம் சாட்டப்பட்ட ஜெனரல் சலான் அப்பொழுது கைதாகாமல் தப்பித்துக் கொண்டார்.

ஜெனரல்கள் புரட்சி பற்றி பாரிசில் விசாரணை நடத்திய ராணுவ உயர் நீதி மன்றம் ஜெனரல் சலான் ஆஜராகாமலே அவருக்கு 1961—ம் ஆண்டு ஜூலை மாதம் மரண தண்டனை விதித்தது

நேற்றுஜெனரல்சலான் கைது செய்யப்பட்டதைத்தொடர்ந்து அல்ஜீயர்ஸ் நகரில் பெரிய குண்டு வெடிக்கப்பட்டது. நேற்றைய சம்பவங்களில் ஏழு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

கோழிக் குஞ்சுகள்

உத்தரவாதம் பெற்ற நம்பிக்கையான "வைட் லெக்கோன்" கோழிக்குஞ்சுகள்— ஒவ்வொன்றும் 60 சதம்.

ஏனைய ஜாதிக் குஞ்சுகள் ஒவ்வொன்றும் 70 சதம்.

அவயகூடத்தில் உள்ளூர் விற்பனைக்கு சிறிதளவு குஞ்சுகள்தான் விற்பனைக்கு இருப்பதால் முன்கூட்டியே பதிவு செய்து ஏமாற்றத்தைத் தவிருங்கள். 50% முற்பணம் செலுத்தப்படும் ஆடர்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

தேசிய அவயகூடமும் கோழிச் சேவையும், மானிப்பாய் வீதி, கூளாவடி, ஆனைக்கோட்டை

முட்டை அடைவைக்கும் விபரங்கள்

ஆகக் குறைந்தது 10 முட்டைகள் தலா 15 சத விகிதப்படி பொரித்துக்கொடுக்கப்படும். முதல் 100 முட்டைகள் தலா 15 சதவிகிதப்படியும், இரண்டாம் 100 முட்டைகள் தலா 14 சத விகிதப்படியும் மூன்ரும் 100 முட்டைகளும் அதற்கு மேலும் தலா 13 சதம் விகிதப்படியும் பொரித்துக் கொடுக்கப்படும்.

தேசிய அவயகூடமும் கோழிச் சேவையும் மானிப்பாய் வீதி, கூளாவடி, ஆனைகோட்டை

## நயினதீவு தேர்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

பிப்பது போன்றவைகளை இம்முறை செய்ய வேண்டுமென தீவுப்பகுதிகளின் காரியாதிகாரி திரு. சாம் தம்பையாவும் முயற்சியெடுத்து வருகிருர். இவர் இது சம்பந்தமாக கொழும்பிலுள்ள அதிகாரிகளுக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் இவைகளின் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டியுள்ளார்.

தேர், தீர்த்தம், தெப்போற்சவங்களை அஞ்சல் செய்ய வேண்டுமென திரு. தம்பையா வானெலிப் பகுதியினரைக் கேட்டிருக்கிருர்.

நாகபூஷனி அம்மன் கொடியேற்றத் திருவிழா ஜூன் 30-ந் திகதி நடைபெறும்.

# "கலைஞர்களை கலைஞர்களே முதலில் பாராட்டவேண்டும்"

## ரசிகரஞ்சனசபா இசைவிழாவில் கலையரசு புத்திமதி

யாழ்ப்பாணம், சனி

"கலைஞர்கள் தங்களுக்குள்ளிருக்கும் போட்டிபொருமைகளைக் கைவிட்டுவிடவேண்டும். கலைஞர்களை மற்றவர்கள் பாராட்டவில்லையே என்று மனம் வருந்துவதற்கு முன் தங்களுக்குள் உள்ளவர்களின் திறமையையும் தகுதியையும் கலைஞர்களே முதலில் பாராட்டத் தொடங்கவேண்டும்."

இவ்வாறு கலையரசு சொர்ணலிங்கம் யாழ்ப்பாணம் ரசிகரஞ்சன சபா இசைவிழாவின் மூன்ரும்நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வண்ணை ஸ்ரீவேங்கடேசவரதராஜப் பெருமாள் கோயில் முன்றிலில் அமைக்கப்பட்டுள்ள விசேஷ பந்தலில் நேற்றைய நிகழ்ச்சிகள் மேளக் கச்சேரியுடன் ஆரம்பமாயின.

சபாத்தலைவர் திரு து. சீனிவாசகம் 'கலையரசு சொர்ணலிங்கத்தை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லையென்ருலும் எனது கடமையையும் நான் செய்யவேண்டியுள்ளது' என்று கூறி கலையரசுவின் கலை ஆர்வத்தையும் கலைப்பணியையும் எடுத்துக் கூறிஞர்.

ரசிகரஞ்சன சபாவின் இசைவிழா நிகழ்ச்சிகள் பலவற்றுக்குத் தலைமை தாங்கிய பாக்கியம் தமக்குக் கிடைத்துள்ள போதிலும் இனிமேலும் இவ விழாவில் கலந்து கொள்ள தனக்குச் 'சந்தர்ப்பம்' இல்லாது போய்விடக் கூடுமென்று கருதியதால் உடல்நலக்குறைவையும் பொருட்படுத்தாது விழாவில் கலந்து கொள்வதாகக் கூறி திரு. சொர்ணலிங்கம் தமது தலைமையுரையை ஆரம்பித்தார்.

### முற்ருக அறிந்தவர் எவருமில்லை

கலையரசு சொர்ணலிங்கம் மேலும் கூறியதாவது:-

சங்கீதத்தை முற்ருக அறிந்தவர்களும், அதை முற்ருக வர்ணித்தவர்களும் எவரும் இல்லை. சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்திருந்த திருமதி கே. பி. சுந்தராம்பாள், தனக்குத் தெரிந்துள்ள சங்கீதம் ஒரு 'துரும்பு அளவு' தான் என்று தெரிவித்தார். திருமதி சுந்தராம்பாளே அவ்விதம் கூறுவதாக விருந்தால் சங்கீதம் எவ்வளவு பெரியது!

எங்கள் நாட்டில் சங்கீதத்தை ஒரு கொஞ்சம் தெரிந்து கொண்ட பலா 'பெரிது' 'சிறிது' பாராட்டிக் கொண்டு, ஒருவர் மீது ஒருவர் பொருமையும், குரோதமும் கொண்டிருப்பதை நாம் காண்கிருேம். கலைஞர்கள், இசைக்கலைஞர்களாலும் வேறு எந்தக்கலைஞர்களானலும் ஒருவர் மீது ஒருவர் பொருமை கொள்ளக்கூடாது. ஒரு கலைஞன் பெருமை பெற்ருல் மற்றக் கலைஞர்களுக்கும் அது பெருமையென்றுகொள்ள வேண்டும்.

பொருமை வளர்ச்சியைக் குறைத்துவிடும். ஒரு கலைஞனிடம் உள்ள குறையைத் தேடிக் கண்டுபிடித்துப் பேசுவது மற்றக் கலைஞர்களுக்குஏற்றதல்ல. ஒரு கலைஞனின் சிறப்பை, திறமையைக்கண்டு மற்றக் கலைஞர்கள் பாராட்டிப் பேச வேண்டும்.

கலைஞர்களைப் போற்றினல் தான் கலை வளரும்; கலைஞரும் வளர்வர். ஒரு சங்கீத வித்துவானை மற்ருெரு வித்துவான் போற்றிப் புகழ்ந்தது உண்டா? கலைஞர்களை மற்றவர்கள் பாராட்டுவதற்கு முன் கலைஞர்களே முதலில் பாராட்டவேண்டும். கலைஞர்களை கலைஞர்களே இகழ்ந்து பேசினல் மற்றவர்கள் எப்படிப் பாராட்டுவர்?

## பாக்கிஸ்தான் சட்டமந்திரி ராஜிஞமா

ராவல்பிண்டி ஏப்.21.

பாக்கிஸ்தான் சட்டமந்திரி முகமது இப்ராகிம் தமது பதவியை ராஜிஞமாச் செய்துள்ளார்.

# தமிழ் மக்களின் நல் வாழ்வு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உரைகள் வேறு எச்சமயத்திலும் இருக்கிறதாக அறியோம். இத்தகைய சிறந்த பாடங்களை பெற்றுள்ள தமிழ்மக்கள் பெரும் பாக்கியவான்கள்.

### பயன்பெறு கொள்கை

தற்கால வாழ்க்கைக்கு ஏற்ற மத உணர்வை உண்டு பண்ணினல்தான் சைவம் முன்னேறும். பிறர் வழிபாட்டு முறைகளைப் பின்பற்ருமல் எங்கள் கோட்பாடுகள், நம்பிக்கைகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றுள் சரியானவற்றைத் தெரிந்து, வரையறை செய்து, எமது சூழலுக்கேற்பப் பழையவற்றைக் கழித்தலும் புதியவற்றைப் புகுத்தலும் வழுவல, இவை காலப்போக்கிற்கு ஏற்றனவாம், என்ற வரம்புக்குள் அமைய நிதானமாக அனுசரிப்பதே சாலச்சிறந்த பண்பும், பயன்பெறும் கொள்கையுமாம்.

புதிய கருத்துகள், பொருள்கள் கண்டுபிடிக்க, ஞானஉண்மைகள் வெளிப்படச் சமயம் விரிந்து முதிர்ந்து சீர்திருத்தம் அடையும். சமயவளர்ச்சி நாகரிக வளர்ச்சிக்குத் தக்கவாறு அமையவில்லை. சமயவழிபாடுகளில் யார் என்ன செய்த போதிலும் கேள்வி முறை இல்லை; அவரவர் தத்தமக்குத் தோன்றியவாறு தம் விருப்பம் போல் செய்கின்றனர். புதியன புகுதல் சமய வழிபாட்டுக்கு ஒக்குமாயினும், பழையன கழிதல் ஒவ்வாது என்ற கொள்கையோடு செயகின்றனர்.

நாம் எம் சமூகத்தவர்களிடையிலும் சமயத்தவர்களிடையிலும் காணும் பிழைகளையும், துன்மார்க்கங்களையும் சுட்டிக் காட்டுவதற்கு மனப்பலம் இல்லாதவர்களாயின், நாம் கோயில் கட்டியேன்? தர்மம் பல செய்தென்? சமய சம்பந்தமான சபைகளில் அங்கத்தவராக இருந்தென்?

### புதியன புகுத்தலாம்

மக்கள் வாழ்க்கையில் காணப்படும் ஒவ்வாத சம்பிரதாயங்களை அகற்ற வேண்டுமாயின், அவற்றிற்குப் பதிலாகச் சிறந்தனவற்றைப் புகுத்துதல் வேண்டும் என்பதை, நாம் நினைவில் வைத்திருத்தல் வேண்டும். சமயப் பயிற்சியில் நவீன ஆசாரங்கள் புகுந்து விட்டன. இதனை அறிஞர் எங்கள் சமய நூல்களோடு ஒப்பிட்டுச் செவ்வனே ஆராய்ந்து உண்மை கண்டு சைவம் முதிர்ந்து நாகரிக நிலையில் உயர்ந்து முன்னுக்கு வருமாறு செய்வாராக.

தேசிய அவயகூடமும் கோழிச் சேவையும்

சுலபமாக பஸ்ஸிலேயே வந்து சேரலாம். – நான்காவது மைல் கட்டைக்கருகாமையிலும் ஆனைக்கோட்டை உபதபாற் கந்தோருக்கு அருகாமையிலும் அமைந்துள்ளது மானிப்பாய் வீதி, கூளாவடி ஆனைக்கோட்டை.

'ஒரு நாள்' — குஞ்சுகளை விற்பனை செய்வதற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் 'ஏஜண்டு'கள் தேவை.

தேசிய அவயகூடமும் கோழிச் சேவையும், மானிப்பாய் வீதி, கூளாவடி, ஆனைக்கோட்டை.

இலங்கையில் ஒரு திறமானதும் யாழ்ப்பாணத்தில் மிகப் பெரியதுமான அடைகாக்கும் யந்திரக்கருவி (16000முட்டைகள் அடை வைக்கக் கூடிய சக்தியுடையது) உதவியுடன் பொரித்த சிறந்த ரகக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

தேசிய அவயகூடமும் கோழிச் சேவையும், மானிப்பாய் வீதி, கூளாவடி, ஆனைக்கோட்டை

# உஷ்ண சக்தி மின்சார நிலையம்

## கல்கத்தாவில் நிறுவப்படுகிறது

கல்கத்தா ஏப். 21

அதிக சக்திவாய்ந்த உஷ்ண சக்தி மின்சார நிலையமொன்று கல்கத்தாவுக்கு வடக்கே 35 மைல் தூரத்தில் அமைக்கப்படவிருக்கிறது. இக்கட்டிடத்துக்கான அடிக்கல்லை இந்தியாவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் டாக்டர் கல்பிரய்த் நேற்று நாட்டினுர்.

25 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும் இந்நிலையத்துக்கான மொத்தச் செலவை அமெரிக்காவே கொடுத்துதவுமென்று டாக்டர் கல்பிரய்த் தெரிவித்தார்.

இப்பொழுது திரையிடப்படுகிறது.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)


கெப்பிட்டல் (கொழும்பு) சபையர் (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் - மனோகரா (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீ கிருஷ்ண (திருக்கோணமலை) மொடர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்தனபுரி)

விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி...
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி....
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி.....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது....



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி

நடித்த

பாலும் பழமும்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.